விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 08 வியாழக்கிழமை (24.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

# அமைச்சு பதவியிலிருந்து விஜயதாஸ நீக்கம்!

## பிரதமரின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

(கொழும்பு)

நீதி மற்றும் பௌத்த சாசனத் துறைகளின் அமைச்சர் பொறுப்பில் இருந்து விஜயதாஸ ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நீக்கியுள்ள நிலையில் இது தொடர்பான கடிதம் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



## டெங்கு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இவ்வாண்டில் இது வரையான காலப்பகுதியில் டெங்கு நோய்க்குள்ளாகி சிகிச்சைகளுக் காக யாழ். போதனா 23

## புதிய அமைச்சரவை மாகாண சபை அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை புதிய அமைச்சரவையுடன் இன்றைய தினம் கூடவுள்ளது. இதனை அடுத்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்கள்மற்றும் பதவி விலகிய அமைச்சர்கள் ஆகியோரின் இருப் 24

## வடக்கு மாகாணசபைக்கு புதிய அமைச்சர்கள் நியமனம்

### ஆளுநர் முன் நேற்று பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

வடக்கு மாகாணசபையின் புதிய அமைச்சர்கள் நேற்றையதினம் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே முன்பாக பதவியேற்றுள்ளனர். இந்த பதவியேற்பு நிகழ்வு பிற்பகல் இரண்டு மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது அமைச்சுக்களின் செயலாளர்களும் பதவி யேற்றுக் கொண்டனர்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக் களை அடுத்து வடக்கு 24

## கேப்பாப்பிலவு காணிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை

### இராணுவம் இணக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 111 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைக்கு இராணுவம் தனது இணக்கத்தைத் தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கேப்பாப்பிலவு பூர்வீக கிராம மக்கள் போராடி வரு 23

## இலஞ்சம் வாங்கிய இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று பகல் 11.00மணியளவில் இலஞ்சம் வாங்கிய வன.வள பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவரை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர். வவுனியா பொலிஸ் நிலையத் 24

## கடன் தொல்லை குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடன் தொல்லை காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதில் கொக்குவில் பூநாறி மரத் தடியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான காசிப்பிள்ளை சுபாஸ் (வயது 39) என்பவரே உயிரிழந்தவராவார். 23

## கொலை; கடத்தல்; சித்திரவதை; போர் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்குவது உறுதி



### கடற்படைத்தளபதி சின்னையா கருத்து

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின்போது எவ்வகையான வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும்சீருடையை அணிந்துகொண்டு குற்றங்களில் ஈடுபட்டிருந்தால் அதனை மன்னிக்கவே முடியாது என்று நாட்டின் புதிய கடற்படைத் தளபதியும், அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட இரண்டாவது தமிழருமான வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். குற்றங்கள் நிரூபிக்கப்படும்வரை அனை 24

## பொலிஸாரால் அச்சுறுத்தல்

(குருமன்காடு)

வவுனியாவில் புகையிரதக் கடவையில் பணியாற்றும் ஊழியரை வேலையை ராஜினாமா செய்யுமாறு கூறி பொலிசார் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 24

## முதலமைச்சரை கட்டுப்படுத்தும் கட்சி தீர்மானம் கூடாது

### ரெலோவிற்கு சி.வி. பதில் கடிதம்



(யாழ்ப்பாணம்)

கட்சிகள் எடுக்கும் தீர்மானங்கள் சிபார்சுகளே அன்றி ஒரு முதலமைச்சரை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக கொள்ளக் கூடாதென வடமாகாண முதல 23

## மருத்துவர் இன்மை பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதேச வைத்திய சாலைகளில் மருத்துவர்கள் இல்லாத நிலைமையில் உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படாத காரணத்தால் குடும்ப பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா 23

## முறிகள் கொடுக்கல் வாங்கலை மறைக்கும் முயற்சி - விஜயதாஸ

(கொழும்பு)

முறிகள் கொடுக்கல் வாங்கலை மறைக்கும் முயற்சி இடம்பெறுகிறதென அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ நீதி மற்றும் 23



முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்
எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 முதல் 11.30 வரை
Tilko City Hotel - Jaffna
முன்பதிவுகளுக்கு:- 021 222 1455, 077 782 2014 & Type Stock and SMS
துறைசார் நிபுணர்களின் சிறப்புக் கருத்துப் பகிர்வுகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சிறப்புப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்.
அனுமதி இலவசம் - மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் - அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
CSE
COLOMBO STOCK EXCHANGE
(C-9406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42-ம் வீதியில் இரண்டு அறைகள் (AC/Non AC) இணைந்த குளியலறைகளுடன் கூடிய தொடர்மாடி வீடு நாள் வாடகைக்குண்டு.
(212) தொடர்பு: 0778378597

## வேலைவாய்ப்பு

கைதடி வடக்கிலுள்ள தையல் நிலையத்துக்கு பெண்களின் ஆடைகள் வெட்டித் தைத்துக் கொடுக்கக்கூடிய பெண்கள் தேவை.
(212) தொடர்பு: 0778378597


# மரண அறிவித்தல்



## கதிரவேலு தேவராசா (பாலு)

பண்ணாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட கதிரவேலு தேவராசா (பாலு) நேற்று (23.08.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், சேதுப்பிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும், அமரர் இராமலிங்கம் மற்றும் நடராசா (கஜமுகன் ஹாட் வேயர்ஸ்), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் ஜெகதேவி மற்றும் மோகனாம்பிகை, சுபதினி, தயாளினி, சயந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நாகமௌலி, நடராசா, அருள்லிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாத்வீகா, தர்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2017) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விசவத்தனை வீதி,
பண்ணாகம், சுழிபுரம்.
(சி-9414)

தகவல் : குடும்பத்தினர்
077 545 8765

# கேள்வி அறிவித்தல்

## துரையப்பா விளையாட்டரங்குப் பராமரிப்புச் சேவை

## யாழ்ப்பாணம் மாநகர சபை

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் வட மாகாணத்திலுள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றன.
02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை 10.09.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை பூரணப்படுத்தி **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 28.08.2017 ஆம் திகதியிலிருந்து 10.09.2017 ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபாய் 2,000.00 + வற் இனைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
04. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 11.09.2017 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| துரையப்பா விளையாட்டரங்குப் பராமரிப்புச் சேவைத் தேவைப்பாடுகள் | தேவைப்படும் மனித வலு | மனித வலு ஒன்றிற்கான கூலி | மொத்தம் |
|---|---|---|---|
| ✦ பிரதான மைதான புற்கள் வெட்டுதல், துப்புரவு செய்தல், பசளையிடல், நீர்ப்பம்பியினைக் கையாளுதல், கிருமிநாசினி விசுறுதல் மற்றும் நீர் விசுறுதல். | | | |
| ✦ பிரதான அரங்கில் உள்ள இருக்கைகள் முக்கிய பிரமுகவர்களுக்குரிய கண்ணாடி அறையின் கண்ணாடி, தளப்பரப்பு, அறைகள் என்பன ஒவ்வொரு நாளும் துப்புரவு செய்தல். | | | |
| ✦ மேற்குப்புற அரங்கில் உள்ள இருக்கைகள், தளப்பரப்பு மற்றும் அமைப்புக்களைத் துப்புரவு செய்தல். | 8 | | |
| ✦ உள்ளக விளையாட்டரங்கு, தளப்பரப்பு, அமைப்புக்கள் மற்றும் விளையாட்டரங்கில் உள்ள மலசலகூடங்களைத் துப்புரவு செய்தல். | | | |
| ✦ பிரதான மைதானம் (வெளிப்புற வடிகாலுக்குள்) தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள புற்களை வெட்டல் மற்றும் நீர் விசுறுதல். | | | |
| ✦ மைதானத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும் போது மைதானத்தை மட்டமாக்குதல். | | | |
| ✦ மைதானத்தில் சேரும் குப்பைகளைத் தரம் பிரித்தல். | | | |

குறிப்பு: மேற்கூறப்பட்ட சேவைகளிற்கு அனுபவம் உள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். தயாரிக்கப்பட்ட அட்டவணைக்குக்கேற்ப சேவைகள் வழங்கப்படுவதை தெரிவு செய்யப்படும் நிறுவன அமைப்பைச் சேர்ந்த வருகை தரும் உத்தியோகத்தரே நாளாந்தம் உறுதி செய்தல் வேண்டும்.

தலைவர் / ஆணையாளர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
24.08.2017
(சி-9412)

# வடக்கு பிரச்சினைகள் குறித்து ஆளுநரிடம் ஜனாதிபதி கேள்வி

## விளக்கம் கோரியுள்ளதாக முதலமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் அரசியல் கைதிகளின் விடுதலை. காணி விடுவிப்பு தொடர்பில் மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்காக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கம் ஒன்றை கோரியுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் பதவியேற்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் முடிவில் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள பிரச்சினைகள் குறிப்பாக காணி பிரச்சினைகள், மக்களுடைய காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்து கொண்டு மக்களை மீள்குடியேற விடாமல் தடுத்து வருகின்றமை மற்றும் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு அரசியல் கைதிகளின் விடுதலை ஆகியவற்றை வலியுறுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தேன்.

இதன் பின்னர் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அந்த கடிதத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்படி விடயங்கள் தொடர்பில். கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்றார்.

ஆகவே வடக்கு மாகாணத்தில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலையில் ஏற்படும் இழுபறி நிலை மற்றும் காணி விடுவிப்புக்கள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார் எனக் கோரி வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

எனவே ஆளுநரின் பதிலளிப்பின் பின்னர் தான் தன்னால் கருத்து கூற முடியும் என முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அநுராதபுரம் சிறைக் கைதிகள் தமது வழக்கு விசாரணைகளை துரிதபடுத்துமாறு கோரி கடந்த நான்கு வருடங்களாக பல தடவைகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் இதுவரை அந்தக் கைதிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## விஞ்ஞான பீட மாணவன் மரணம்

# மேலதிக பரிசோதனைகளுக்காக உடற்பாகங்கள் கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட மாணவன் ஒருவர் அண்மையில் உயிரிழந்தமை தொடர்பாக மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக அவரது உடற்பாகங்கள் கொழும்புக்கு அனுப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ப.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைகழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்று வந்த மாணவனான விஜயரத்னம் விந்துஷன் என்பவர் கடந்த 20 ஆம் திகதி உயிரிழந்திருந்தார். இந்நிலையில் குறித்த மாணவன் மா்மக்காய்ச்சல் அல்லது டெங்கு நோய் தாக்கத்திற்கு உட்பட்டே உயிரிழந்திருந்ததாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்றையதினம் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரை தொடர்பு கொண்டு வினவியிருந்த போதே குறித்த மாணவனது உயிரிழப்பானது டெங்கு நோயின் தாக்கத்தாலேயே இடம்பெற்றிருந்தது என்ற உறுதியான முடிவு பெறப்படவில்லை என தெரிவித்திருந்தார்.

மேலும் குறித்த மாணவன் இருதய அழற்சி எனும் நோயின் காரணமாகவே உயிரிழந்துள்ளதாகவும் எனினும் குறித்த மாணவனின் இறப்புக்கான காரணம் தொடர்பாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக அவரது உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ப.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். பல்கலைகழகத்தின் விஞ்ஞான பீட மாணவர்கள் சிலர் டெங்கு நோய்க்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் நேற்றைய தினம் அவ்வாறு யாரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

# இரவீந்திரனுக்கு இடமாற்றம்

## நல்லிணக்கத்துக்கான அமைச்சின் மேலதிக செயலராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் இடமாற்றபபட்டு எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண சபையில் கடந்த 2000 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 11 ஆம் திகதியில் இணைந்து கொண்ட இவர், வடக்கு மாகாண சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சுகளின் செயலாளராக பணியாற்றியுள்ளார்.

வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றிருக்காது தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் கூடிய காலம் பணியாற்றியதன் அடிப்படையிலேயே குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சின் செயலாளராக சிவஞானசோதி பணியாற்றிவரும் நிலையில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் இவருக்கு தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சின் மேலதிக செயலாளராக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (செ-9)


## காணிகள் தேவை

யாழ்.நகர், நல்லூர், கச்சேரி, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் காணிகள் தேவை.
தொடர்பு:
077 029 5211
(214)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சரவை நேற்று பதவியேற்பு



வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சரவை உறுப்பினர்கள் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டனர்.
(படங்கள்:-உ.சாளின்)

# 20ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றில் அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இத் திருத்தச் சட்ட மூலம் மற்றும் முன்மொழியப்பட்ட விடயங்கள் தொடர்பாக இன்று அவையில் விவாதிக்கப்படும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். (இ-7)

## இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படும் ஐஸ் போதைப்பொருள்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஐஸ் போதைப் பொருள் கடத்தப்படுவது குறித்து இந்திய சுங்கத் திணைக்களம்தகவல்வெளியிட்டுள்ளது.

அந்த திணைக்களத்திற்கு கிடைத்த தகவலை அடுத்து கடற்படையினருடன் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் இந்த கடத்தல் தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு ஐஸ் என்ற போதைப்பொருள் கடத்தப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இலங்கைக்கு கடத்தத் தயாராக வைக்கப்பட்டிருந்த 24 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருள் படகொன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள் ளது.

தேடுதல் நடத்தப்பட்ட சமயத்தில் கடத்தல்காரர்கள் போதைப்பொருளை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது. (இ-7)

## ரத்துபஸ்வல துப்பாக்கிச்சூட்டு சம்பவம்


## பிரிகேடியர் அநுர தேசப்பிரிய தொடர்ந்தும் விளக்கமறியலில்

(கொழும்பு)

ரத்துபஸ்வல சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள பிரிகேடியர் அநுர தேசப்பிரிய குணவர்தன உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கம்பஹா பிரதான நீதவான் டீ.ஏ.ருவன் பத்திரன மூலம்குறித்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா ரத்துபஸ்வல பிரதேசத்தில் சுத்தமான குடி



நீர் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்திய இராணுவ குழுவிற்கு பொறுப்பாயிருந்தமை தொடர்பில் பிரிகேடியர் அநுர தேசப்பிரிய குணவர்தன உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2013 ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத தக்கது. (இ-7)

## அளுத்கம கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கு 2 மில்லியன் இழப்பீடு

அளுத்கம, பேருவளை மற்றும் தர்காநகரில் கடந்த 2014ஆம் ஆண்டு நடைபெற்ற முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, கலவரத்தில் மரணித்தவர்களுக்கு 20 இலட்சம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்கு 5 இலட்சம் ரூபாவும் நட்டஈடாக வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலவரம் காரணமாக மூவர் உயிரிழந்ததுடன் 12 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜயலத்தின் மறியல் நீடிப்பு

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழுவின் இணைப்பாளர் ரயான் ஜயலத்தை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பல்கலைக்கழக மருத்துவபீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழுவின் இணைப்பாளர் ரயான் ஜயலத்தை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் உத்தரவிட்டிருந்த நிலையில் நேற்று அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது நாளை 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரயான் ஜயலத் உட்பட ஐவரை கைது செய்யுமாறு கடந்த 10 ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந் தது.

இந் நிலையிலேயே ரயான் ஜயலத் தனது சட்டத்தரணிகளுடன் கடந்த 18ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வினாப்பத்திர விவகாரம் மூன்று பேருக்கும் விளக்கமறியல்

இம்முறை நடைபெற்ற, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான இரசாயனவியல் பாடத்தின் பகுதி 2க்கான வினாக்கள் சிலவற்றை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்தார் என்ற சந்தேகத்தின் பேரில், ஒருவரைக் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா நகரில் வைத்தே அவரைக் கைது செய்துள்ளதாவும், அவரே, அந்தத் துண்டுப்பிரசுரத்தை கணனியில் வடிவமைப்புச் செய்தவர் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவருக்குக் கிடைத்த வினாக்கள் சிலவற்றை உள்ளடக்கியே, இந்தத் துண்டுப் பிரசுரத்தை தயாரித்துள்ளார் என்றும் அந்தப் பரீட்சை நடைபெற்ற 19ஆம் திகதியன்றே, வினாக்களும் கிடைத்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள இவர், களனி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் கம்பஹா நகரில் உள்ள கணனி மத்திய நிலையத்தில் சேவையாற்றுபவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்த விவகாரம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரையும் கம்பஹா நீதவான் நீதி மன்றத்தில் நேற்று ஆஜர்படுத்திய போது, அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த கால தோல்விகளுக்கு பதிலடி கொடுக்குமா இலங்கை?

## 2ஆவது ஒரு நாள் போட்டி இன்று பல்லேகலேயில் ஆரம்பம்

இலங்கை-இந்திய அணிகள் மோதும் 2ஆவது ஒருநாள் போட்டி இன்று கண்டி பல்லேகலேயில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கு இடையேயான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

5 ஆட்டம் கொண்ட ஒரு நாள் போட்டி தொடரில் தம்புள்ளையில் நடந்த முதல் போட்டியில் இந்தியா 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரு அணிகளும் மோதும் 2ஆவது ஒருநாள் போட்டி இன்று பல்லேகலேயில் நடக்கிறது. இப்போட்டி பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்குகிறது.

இந்திய அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்ட வரிசையில் பலம் பொருந்தியதாக இருக்கிறது.

ஷிகர் தவான், ரோகித் சர்மா, விராட் ஹோலி, லோகேஷ் ராகுல், எம்.எஸ்.தோனி, கேதர் யாதவ், பாண்ட்யா ஆகியோர் உள்ளனர். முதல் போட்டியில் ஷிகர் தவான் சதம் அடித்து அசத்தினார்.

பந்து வீச்சில் புவனேஸ்வர்குமார், பும்ரா, சாஹல், அக்சர் பட்டேல் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

இதனால் இந்தியா சமபலத்துடன் திகழ்கிறது. இன்றைய ஆட்டத்தில் வென்று 2ஆவது வெற்றியை பதிவு செய்யும் முனைப்பில் இருக்கிறது.

இன்றைய போட்டியில் இடது கை சுழற் பந்து வீச்சாளர் குல்தீப் யாதவுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உபுல் தரங்க தலைமையிலான இலங்கை அணி முதல் ஆட்டத்தில் தோற்றதால் வெற்றி நெருக்கடியில் உள்ளது.

அந்த அணியில் டிக்வெல, குணதிலக, குசல் மெண்டிஸ், மத்யூஸ், கபுகெதர, பெரேரா, மலிங்க, சன்டகன், டி சில்வா போன்ற



வீரர்கள் உள்ளனர்.

ஆனாலும் இலங்கை அணி நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறிவிட்டது. முதல் போட்டியில் சிறப்பான ஆரம்பத்தை கண்ட அந்த அணி அதன்பின் விக்கெட்டுக்களை மளமளவென பறிகொடுத்தது.

இதனால் துடுப்பாட்டத்தில் கவனம் செலுதத வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

முதல் போட்டி தோல்விக்கு பதிலடி கொடுக்க இலங்கை முயற்சிக்கும் என்றாலும் வலுவான இந்தியாவை வீழ்த்த போராட வேண்டும்.

இங்கிலாந்து உள்ளூர் ரி20

## 42 பந்துகளில் சதம் விளாசிய அப்ரிடி




இங்கிலாந்தில் நடக்கும் நட்வெஸ்ட் 'இருபது-20' தொடரில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவரும் அதிரடி ஆட்டக்காரருமான அப்ரிடி 42 பந்துகளில் சதம் விளாசி அசத்தினார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையால் நட்வெஸ்ட் 'இருபது-20' தொடர் நடத்தப்படுகிறது. இதன் 4ஆவது 'சீசனின்' முதல் காலிறுதியில் டெர்பிஷயர், ஹம்ப்ஷயர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற டெர்பிஷயர் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

**அப்ரிடி அபாரம்**

ஹம்ப்ஷயர் அணிக்கு அப்ரிடி அட்டகாசமான ஆரம்பம் கொடுத்தார். மட்சன் வீசிய முதல் ஓவரில் 4 பவுண்டரிகள் விளாசினார். பென் காட்டன் பந்துவீச்சில் தொடர்ந்து இரண்டு சிக்ஸர்கள் அடித்த இவர், 42 பந்துகளில் சதம் அடித்தார்.

இது, 'இருபது-20' அரங்கில் அப்ரிடி அடித்த முதல் சதமாக பதியப்பட்டது. ஹென்ரி பந்தில் அப்ரிடி 101 ஓட்டங்களில் (43 பந்துகள், 10 பவுண்டரி, 7 சிக்ஸர்) ஆட்டமிழந்தார். மற்றையவர்கள் ஓரளவு கைகொடுக்க, ஹம்ப்ஷயர் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கை விரட்டிய டெர்பிஷயர் அணிக்கு அலெக்ஸ் ஹியுஸ் (23), பென் காட்டன் (30) மட்டுமே ஆறுதல் அளித்தனர்.

முடிவில், டெர்பிஷயர் அணி 19.5 ஓவர்களில் 148 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்த வெற்றியின் மூலம், ஹம்ப்ஷயர் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து

## உறுதிமொழி கிடைக்கும் வரை உணவு தவிர்ப்பு போராட்டம்

### அரசியல் கைதிகள் உறுதி

சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து உறுதிமொழி வரும் வரை தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிடப் போவதில்லை என அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது 40), கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30), நாவலப்பிட்டியை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது 26) ஆகியோருக்கு கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் தெற்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

வேறு நீதிமன்றங்களுக்கு குறித்த வழக்கை மாற்றினால் தொடர்ச்சியாக இந்த வழக்கு இடம்பெறும் என்றும் மொழிப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய நிலை வரும் எனவும் தெரிவித்து, தமது வழக்கு வவுனியாவிலேயே நடைபெற வேண்டும் என்றும், வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக் கூடாது என்றும், கோரி இன்றைய தினம் 5 ஆவது நாளாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த அரசியல் கைதிகளுடைய வழக்கு நேற்றைய தினம் வவுனியா மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது சட்டமா அதிபர் திணைக்களத்தால் குறித்த கைதிகள் தொடர்பான வழக்கினை விசாரணை மேற்கொள்வதற்கு மேலும் ஒரு மாத கால அவகாசம் கோரப்பட்டது.

ஆனால் குறித்த கைதிகள் உணவு தவிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்களால் ஒரு மாத காலத்துக்கு காத்திருக்க முடியாது எனவும் விரைவாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் மன்றில் தெரிவித்தார்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிபதி குறித்த கைதிகள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்கள், வழக்கு எனது பொறுப்பில் உள்ள காரணத்தால் விசாரணை விரைவுபடுத்தப்பட வேண்டும். எனவே இவர்கள் தொடர்பாக வழக்கு விசாரணை விளக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25,26,27ஆம் திகதிகளில் இடம்பெறும் என கட்டளையிட்டுள்ளதுடன், செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி வரை குறித்த கைதிகளை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதேவேளை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து தமது வழக்குகள் வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக்கூடாது என தமக்கு உறுதிமொழி வழங்கும் வரை போராட்டத்தை தொடரவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபடும் அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர். (செ-9)

சுமந்திரன் மீதான கொலை முயற்சி

## மறியல் நீடிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலை முயற்சி வழக்குடன் தொடர்புடைய ஐந்து சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலை நீடிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் அரசியல் பிரமுகர் ஒருவரை கொலை செய்ய முயற்சித்தமை உட்பட சில குற்றச்சாட்டுக்களின் கீழ் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே அவர்களுக்கு தொடர்ச்சியாக விளக்கமறியல் நீடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## 5 பொலிஸாருக்கும் மறியல் நீடிப்பு

யாழ். சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சந்தேகநபர்களை எதிர்வரும் நான்காம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஐந்து இளைஞர்களை யாழ். சுன்னாகம் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அதில் சிறிஸ்கந்தராஜா சுமனன் என்ற இளைஞர் உயிரிழந்த நிலையில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புதிய பாதுகாப்பு படைகளின் பிரதானியாக பொறுப்பேற்ற அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை சந்தித்து நட்புறவு கலந்துரையாடலில் ஈடுபட்டார். பாரம்பரிய முறைப்படி நினைவுப் பரிசில்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

புதிய கடற்படை தளபதியாக பணியைப் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து நட்புறவு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பாரம்பரிய முறைப் படி நினைவுப் பரிசில்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1931 - 04 - 09 | 2011 - 08 - 30 |

## அமரர். நடராஜா பத்மநாதன்

(திதி: திருதியை)

எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஆறு சென்ற போதும் பசுமையான உங்கள் நினைவுகள் எங்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் கனவுகள் நனவாகி உங்கள் ஆணைப்படி நாம் வாழ்ந்திட என்றும் உங்கள் ஆசி வேண்டும் எமக்கு உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனை வேண்டி நிற்கின்றோம்.

(207)

103/1, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மனைவி ப.அன்னலட்சுமி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஆசிரிய மாணவர்களுக்கான மூன்றாம் தவணை வகுப்புக்கள் செப்டெம்பர் 6-ம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான மூன்றாம் தவணை வகுப்புக்கள் எதிர்வரும் செப்டெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் என யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

. தேசிய கல்வியியற் கல்லூரிகளின் மூன்றாம் தவணைக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ள நிலையில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் வருட மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 28 ஆம் திகதியும், முதலாம் வருட மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதியும் ஆரம்பமாகும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் அமைச்சின் அறிவித்தலுக்கமைய முதலாம், இரண்டாம் மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும்செப்டெம்பர்மாதம் 6 ஆம் திகதி ஒரே நாளில் ஆரம்பிக்கும் எனவும் அன்றைய தினம் மாணவர்கள் அனைவரையும் சமுகமளிக்கும் படி பீடாதிபதி அறிவித்துள்ளார். (இ-9)

# கண்ணீர் அஞ்சலி



அமரர். திருமதி.

## தங்கம்பிள்ளை நல்லதம்பி

(தையிட்டி தெற்கு, காங்கேசன்துறை /கனடா)

எமது பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ந.ஜெகன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. **தங்கம்பிள்ளை நல்லதம்பி** அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-9411)

பாடசாலைச் சமூகம், யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

# ஈரெட்டாமாண்டுகளாய் நினைவோடு வாடுகின்றோம் நாம் இருவர்



திருமதி.

## தர்மகுலசிங்கம் விமலலோஜினி

BA(Hons) Dip in Edu (Merit) பரதநாட்டிய கலா வித்தகர்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1967 - 08 - 06 | 2001 - 08 - 24 |

பொழுது விடியவில்லை பொற்கோழி கூவவில்லை
போன இடந்தேடித் தேடி அலைகின்றோம்-நாம்
செல்லும் இடமெல்லாம் வாடி வதங்கி வதனமுகம்
காண ஓடி அலைகின்றோம்-வெண்ணில வெங்கும் பார்த்து
பாறிவிழுந்த பாலைமரம் வேரின்றிப் போனதால்
விழுதொன்று வாடியிருக்கிறதே இம் மண்ணில்...
என ஆத்ம பிரார்த்தனையோடு

ABC லேன்,
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(199)

கணவன் இ.தர்மகுலசிங்கம்
மகன் த.விமலலோஜன்
மாமா, மாமி குடும்பம்

# இராசி பலன்

24.08.2017

(ஆவணி 08, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
திருதியை முன்னிரவு 10.35 மணிவரை
உத்தரம் பிற்பகல் 4.44 மணிவரை
சுபநேரம் 7.35 - 9.05 மணிவரை
இராகுகாலம் 1.35 - 3.05 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம்,சதயம் | | செவ்,<br>சுக்,<br>ராகு,புத |
| கேது | | | சூரி |
| | சனி | | குரு<br>சந் |

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கனவு பலிதம் உண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**இடபம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், பெற்றோர் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, மனதில் இனம் புரியாத சம்பவங்கள் தோன்றி மறையும்.

**கடகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** தேக நலனில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் உண்டு, எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், சிறப்பான நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** வெளியூர்த் தொடர்புகளால் மதிப்பும் மரியாதையும் உயரும், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், நினைத்த காரியத்தை எளிதில் நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் பகை அகலும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்** குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபவிரயங்கள் கூடும்.

**கன்னி** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும் நாள், உடல் நலன் சிராகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆவணங்களை பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

குறைவான வசதிகளையுடைய மக்களுக்கான சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவையானது தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை யாழ். தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையில் இடம் பெறவுள்ளது. இந் நடமாடும் சேவை மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பாக மக்களுக்கான சேவைகள் இடம்பெறும் என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளைசிறி அறிவித்துள்ளார்.

இலவசமாக பிறப்பு , இறப்பு , திருமண பதிவு சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளல், பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு சான்றிதழ்களில் திருத்தங்கள் மேற்கொள்ளல், இலவசமாக சான்றிதழ்கள் மும்மொழியிலும் மொழி பெயர்ப்பு செய்து வழங்கல் , இலவசமாக சட்ட ரீதியான திருமண பதிவு மேற்கொள்ளல், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான துணை ஆவணங்களை பெற்றுத் தருவதோடு ஆரம்ப நடவடிக்கை மேற் கொள்ளல், EPF,ETF தொடர்பான ஆலோசனை வழங்கலும் அதன் மூலம் கடன் பெற்றுக் கொள்ளல் தொடர்பான ஆலோசனை வழங்கல், சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆலோசனை பெற்று வழங்கல், வரிப்பணம் மற்றும் வாடகைப் பிரிச்சினைத் தீர்வு, அடிப்படை உரிமை, மனித உரிமைகளிற்கான தீர்வு, ஓய்வூதிய பிரச்சினைகளிற்கான தீர்வு ,நீர், மின்சாரம் போன்றவற்றிற்கான தீர்வு, அரச காணிப் பிணக்குகளிற்கான தீர்வு, கமநல சேவை பிரச்சினைகளிற்கான தீர்வு என்பனவாகும். (இ

# நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலத்தில் சிறப்பாக பணிபுரிந்த பொலிஸாருக்கு பாராட்டு





வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ காலத்தின்போது சிறப்பான முறையில் கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா நடைபெற்றது.நல்லூர் ஆலயத்தின் பாதுகாப்புக்காக 600 இற்கும் மேற்பட்ட பொலிஸார், ஆலயத்தின் உள்வீதி, வெளிவீதி மற்றும் வீதித்தடைகளில் பாதுகாப்பு கடமையில் ஈடு படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளான நேற்றைய தினம் வைரவர் உற்சவத்தின் போது பொலிஸாரினால் விசேட பூஜை வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டது. குறித்த விசேட பூஜை வழிபாட்டில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலி ஸாருக்கு, ஆலய நிர்வாகத்தினர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

விசேட பூஜை வழிபாட்டில் வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் றொஷான் பெர்னாண்டோ, யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸார் கலந்து கொண்டனர்.

விசேட பூஜை வழிபாட்டின் பின்னர் வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் றொஷான் பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 25 நாட்களாக நடைபெற்ற நல்லூர்க்கந்தன் உற்சவத்தில் 600 க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தார்கள்.எனினும் இந்த 25 நாட்களிலும் எந்தவிதமான குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை. எனவே கடமையில் ஈடுபட்ட அனைத்து பொலிஸாருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொலிஸார் சிறப்பான கடமையில் ஈடுபட்டமைக்கு நன்றியை தெரிவிப்பதுடன் பொலிஸாரின் தனிப்பட்ட பதிவேடுகளில் ஒரு நற்சான்றிதழ் பத்திரம் ஒன்றை வழங்கவும் உத்தேசித்துள்ளேன். அது கடமையில் ஈடு பட்டிருந்த அனைத்து பொலி ஸாருக்கும் நன்மையாகவிருக்கும் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நல்லூர் ஆலய அறங்காவலர் சபையின் தலைவர், ஆலயத்தின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு தன் நன்றிகளை தெரிவிப்பதாகவும் இந்த ஆண்டு ஆலய வருடாந்த உற்சவத்தின் போது எந்தவித அசம்பாவிதங்களும் பதிவாகவில்லை. அதற்கு பொலிஸாரின் திறமையான செயற்பாடுகளே காரணம் எனவும் தெரிவித்தார். (இ-9)

# 32-வது ஆண்டு நிறைவுக் கூட்டம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 32-வது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டமும் கழக செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் வதிரியிலுள்ள கழக மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு கழகத் தலைவர் வ. சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவு செய்யப் படுவதோடு கடந்த 25 வருடங்களுக்கு மேலாக கழகம் இயங்கிவரும் கட்டடத்தை அதன் உரிமையாளருக்கு ஒப்படைத்த பின் கழகம் இயங்கும் இடம் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும்.

ஆண்டுச் சந்தாவை இது வரை செலுத்தாதவர்கள் தமது சந்தாவைக் கூட்டம் நடைபெறும் தினத்தில் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கழகத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரையும்இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கழகத்தலைவர் கேட்டுள்ளார். (இ

# நெல்லியடி சந்தைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு



நெல்லியடி சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கரவெட்டி சுகாதார அதிகாரி சுதோக்குமார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது நெல்லியடி பொலிஸாரும் இணைந்திருந்தனர். (இ-60)

# ஆடுகள் திருடிய குற்றச்சாட்டு; நால்வர் 31ம் திகதிவரை மறியலில்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் வீடு ஒன்றில் 40 ஆயிரம்ரூபாய் பெறுமதியான இரண்டு ஆடுகள் திருடப்பட்ட வழக்குடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்ற பதில் கடமை நீதவான் சறோஜினி இளங்கோ உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 18 ஆம் திகதி இரவு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகள் திருட்டுப் போனது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இந்த முறைப்பாட்டுக்கமைய கடந்த 19 ஆம் திகதி கீரிமலைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்த போதே எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10-104)

# விருது வழங்கல் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மதங்களுக்கிடையிலான ஒற்றுமையை வளர்தெடுக்கும் அமைப்பான அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் தேசிய மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இவ் மாநாட்டுக்கான ஒழுங்கமைப்பு மற்றும் தேசிய விருது வழங்கல் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் அரியாலை சர்வோதய நிறுவன மண்டபத்தில் யாழ். மாவட்ட தேசோதய தலைவர் நா. தனேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் ஐக்கிய அமெரிக்க இராச்சிய அங்கத்தவர்கள், தேசோதய அங்கத்தவர்கள், சர்வோதய உறுப்பினர்கள் மற்றும் யாழ். மாவட்ட சமாதான நீதவான்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தேசோதய தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-134)

# ஆன்மீக நிகழ்வுகளில் இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப்பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் இடம் பெறும்.

இதில் செல்வச் சந்நிதி ஆலய அறநெறி மாணவர்களின் பஜன், தும்பளை நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவி செல்வி வேணுஜா ஸ்ரீ நடராஜாவின் பேச்சு, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அதிபர் சைவப் புலவர் செ. பரமேஸ்வரனின் ஆன்மீக சொற்பொழிவு என்பன இடம் பெறும். (இ-3)

# 'யார் அந்த தேவதை' இசை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கவி பிலிம்ஸ் (SHAN GAVI FILMS) அவுஸ்திரேலிய தயாரிப்பு நிறுவனமான சந்திரா இணைந்து வழங்கும் 'யார் அந்த தேவதை' இசை வெளியீடும் சங்கவி பிலிம்ஸின் அகங்காரம் திரைப்பட ஆரம்ப விழாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ஆ.புவனேஸ்வரன், து. ரவிகரன், கௌரவ விருந்தினராக இயக்குநர் என். எஸ். தனபாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




# கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலய கணபதி ஹோமம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும். (இ-10-136)

# மரக்கறிச் சந்தை மக்கள் பாவனைக்கு வருமா?

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாகர் கோவில் வடக்கு புதிய மரக்கறிச் சந்தை கடந்த ஒரு வருட காலத்திற்கு முன்னர் பருத்தித்துறை பிரதேச சபையினரால் கட்டப்பட்டது. ஆனால் இதுவரை மக்கள் பாவனைக்கு கையளிக்கப் படவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கொண்டு இம்மரக் கறிச் சந்தையை விரைந்து மக்கள் பாவனைக்கு வழங்க நடவடிக்கையெடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



ஆர்வத்தோடு கற்று வந்த மாணவி வித்தியாவுக்கு கல்லறை கட்டப்பட்டு விட்டது. கொலை என்பதால் சைவமுறைப்படி தகனம் செய்வதும் முடியாத காரியமாகிப் போயிற்று.

எனினும் வித்தியாவின் கல்லறை நூறுடன் நூற்றொன்றாவது அல்ல அது ஒரு அடையாளச் சின்னம். அக்கிரமங்கள், வன்மங்கள், வக்கிரங்கள் இவற்றுக்குக் கல்லறைகள் கட்டாவிட்டால் வாழ வேண்டியவர்கள் கல்லறைக்குள் இருந்து கொள்வர் என்ற உண்மையைப் பேசுகின்ற சாட்சியம்.

இறப்பு உலக வாழ்வில் நடக்கும் இயற்கை நிகழ்வு. இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்பு உரிமை என்றார் இந்தியாவின் பிரதமராக இருந்த நேரு.

அந்த இறப்பு இயற்கையாகக் கிடைக்க வேண்டியது. அந்த உரிமை வேறு எவராலும் தரப்படக் கூடாது.

ஊரெல்லாம்கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணம் என்று பெயரிட்டு
சூரையம் காட்டிடை கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தாரே

என்று இறப்பின் முடிவை திருமூலர் பாடி முடிக்கிறார்.

இறந்தவர்களை மயானத்தில் சுட்டுவிட்டு வீட்டிற்கு வந்து நீரில் முழுகி இறந்தவரை மறந்துபோவதுதான் உலக இயல்பு என்று திருமூலர் கூறினாலும் வித்தியாவின் இறப்பில் மட்டும் திருமூலரின் பாடல் தோற்றுப்போனது.

ஆம், வித்தியாவின் இறுதிச் சடங்கு முடிந்த கையோடு வித்தியாவுக்கு நேர்ந்த அக்கிரமம் தொடர்பில் எங்கும் எதிர்ப்புப் போராட்டம் புத்துருவாகியது.

**ஐவர் கைது**

வித்தியாவின் சடலம் கண்டறியப்பட்ட 14 ஆம் திகதி மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்ட போது அப்பகுதி மக்கள் மௌனமாகவே இருந்தனர். சந்தேகத்தின் மீதான கைது என்பதால் அப்படியொரு மௌனம் காக்கப்பட்டது எனலாம்.

17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களை ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவின் உப அலுவலகமாகிய குறிகாட்டுவானில் இருந்த பொலிஸார் கைது செய்திருந்தனர்.

வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்ட ஐந்து பேரைப் பொலிஸார் கைது செய்து குறிகாட்டுவான் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர் என்ற செய்தி புங்குடுதீவு எங்ஙனும் பரவிக்கொள்ள,

திரண்டெழுந்த புங்குடுதீவு மக்கள் குறிகாட்டுவான் நோக்கிப் படையெடுத்தனர். இப்படையெடுப்பு 17 மே 2015 மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.



## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

கூடவே யாழ்ப்பாணத்திலும் இச்செய்தி பரவிக்கொள்ள, ஊடகவியலாளர்களும் யாழ்ப்பாணத்து இளைஞர்களும் குறிகாட்டுவானை நோக்கி குருவியாகப் பறந்தனர்.

கைது செய்துள்ள ஐந்து பேரையும் எங்களிடம் தாருங்கள். நாங்கள் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கின்றோம் என்ற கோஷம் குறிகாட்டுவான் கடலோரம் ஒலிக்க, அந்த ஓசையைக் கடல் அன்னை தன் அலையோடு சேர்த்து அலைவரிசையில் இணைத்துக் கொள்ள பொலிஸாரின் பாடு பெரும் திண்டாட்டமாயிற்று. குறிகாட்டுவானில் மக்கள் கூடிநின்று ஆர்ப்பரிக்க மறுபுறத்தில் புங்குடுதீவின் நுழைவாயில் எல்லைகள் அனைத்திலும் காவல் கடவுளர்களாக இளைஞர்கள் சூலாயுதம், வேலாயுதம், தடியாயுதம் தாங்கி குற்றவாளிகள் வெளியில் தப்பிச் செல்லாது தடுத்தற் பணியிலும் ஈடுபட்டனர்.

இரவுப் பொழுதிலும் புங்குடுதீவு எங்கும் சனக்கூட்டம். நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் குவிக்கப்படுகின்றனர்.

எனினும் ஆவேசம் கொண்ட இளைஞர்கள் புங்குடுதீவுக்குள் நுழையும் அனைத்து வாகனங்களையும் சோதனையிடுகின்றனர். இதில் ஆச்சரியம் பொலிஸாரின் வாகனங்களும் இளைஞர்களால் சோதனையிடப்படுகிறது.

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் பொலிஸாரின் வாகனங்களைச் சோதனையிட்ட வரலாறு இதுவே முதலாவது எனலாம்.

மக்களின் எழுச்சி கண்ட பொலிஸார் மௌனமாக இருப்பதில் மிகவும் கவனமாக இருந்தனர்.

இவை ஒருபுறம் நடந்து கொள்ள, மறுபுறத்தில் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லும் வழி தெரியாது திணறிய பொலிஸார் ஈற்றில் ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

கைதானவர்களை ஜீப் வண்டியில் ஏற்றி புங்குடுதீவு வீதி வழியால் கொண்டு சென்றால் நிச்சயம் பேராபத்து ஏற்படும். அதனால் களேபரங்கள் ஏற்பட்டு நிலைமை மோசமாகலாம்.

ஆக, குறிகாட்டுவான் கடல்வழியாக கைதிகளை ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்வதே ஒரேவழி என முடிவு செய்கின்றனர். அவசர அவசரமாக அம்புலன்ஸ் படகு வரவழைக்கப்படுகிறது.

அதில் கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களும் ஏற்றப்பட படகு கடலைக் கிழித்தவாறு வேகமெடுக்க ஆத்திரமடைந்த கடல் அன்னை பேரலையாக எழுந்து படகைத் தள்ளிவிழுத்த முனைவதும்; இல்லை இல்லை குற்றவாளிகளை சட்டம் தண்டிப்பதே பொருத்தம் எனக்கருதி விடுவது போலவும் தன் கடுப்பையும் பொறுமையையும் காட்டி நின்றது. அப்போது ஊர்காவற்றுறை கடற்கரையில் அந்த ஐந்து இளைஞர்களும் இறக்கப்படுகின்றனர்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண தாதியர் பற்றாக்குறையை நீக்க விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

வடமாகாண தாதியர் பற்றாக்குறையை தீர்க்க தகுதியானவர்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வடமாகாண தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளர் க.நதீஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் அனைத்தும் மேல் மாகாண தாதியர் உத்தியோகத்தர்களை நம்பியே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் சகோதர மொழி பேசும் தாதியர்களே எமது மாகாணத்தில் பணியாற்றி வருகின்றார்கள். இதனால் எமது மாகாண வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் சில நோயாளர்கள் மொழிப் பிரச்சினையால் அவதிப்பட்டும் வருகின்றனர்.

அதேநேரம் மேல் மாகாண தாதியர்கள் தமது மாகாணத்தை விட்டு பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் எமது வடமாகாணத்தில் பணியாற்றுகின்றனர்.

இருப்பினும் அவர்கள் குறிப்பிட்ட காலப்பகுதியின் பின்னர் தமது மாவட்டங்களை நோக்கி இடமாற்றலாகி செல்கின்றனர். மீண்டும் அதே அளவிலான மேல்மாகாண ஆளணியை நம்பியே குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே எமது மாகாணத்தின் தாதியர் சேவையானது நிரப்பப்படாது பற்றாக்குறையாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இதனால் எமது மாகாணங்களில் புதிய அலகுகளை நிர்மாணிக்க முடியாமலும், நிர்மாணிக்க முடிந்தாலும் அதனை தொடர்ந்தும் இயக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைக்கு காரணம் எமது மாகாணத்தில் பலர் தாதியர் சேவைக்கு விண்ணப்பிப்பது இல்லை. கடந்த வருடம் கோரப்பட்ட விண்ணப்பங்களில் எமது மாகாணத்தின் சில மாவட்டங்களில் மிகக் குறைந்தளவிலானவர்களே விண்ணப்பித்துள்ளனர்.

ஆகவே, இம்முறை வடக்கின் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகளவிலானவர்கள் விண்ணப்பிப்பதன் மூலம் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும்.

ஆகவே, எமது மாகாணத்தில் கடந்த 2015, 2016 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி மூன்று பாடங்களிலும் (3 எஸ்) சித்தியும், கல்விப் பொதுச்சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சீ சித்தி பெற்றவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

தகுதியானவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை புத்தக நிலையங்களில் பெற்று விண்ணப்பித்து எமது மாகாண தாதியர் பற்றாக்குறையை தீர்க்க முன்வர வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.(2-250)




# வவுனியா மாவட்டத்தில் சிறுபோகத்தில் உழுந்து செய்கை வெற்றியளிப்பு

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை, பெரும்போகத்திற்கான இலக்கு 12 ஆயிரம் ஏக்கர் உழுந்து செய்கைக்காக, கிட்டத்தட்ட 144,000-150,000 கிலோகிராம் விதை உழுந்து தேவை உள்ளது.

பொதுவாக அவரையின பயிர் விதைகளை நீண்டகாலம் சேமித்து வைக்க முடிவதில்லை. நீள் மூஞ்சிவண்டுகளின் தாக்கம் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

வவுனியா மாவட்ட விவசாயத்திணைக்களமானது, நீர்ப்பாசன மற்றும் கமநல சேவை திணைக்களங்களுடன் இணைந்து பயிர் மாற்றீட்டுத் திட்ட வேலைத் திட்டத்தினை முன்னெடுத்து வெற்றி அடைந்துள்ளது.

எனவே, 2017 ஆம் ஆண்டின் சிறுபோக குளக் கூட்டத்தில் பயிர் மாற்றீட்டுத் திட்டத்திற்கான ஆலோசனை, வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரினால் முன்வைக்கப்பட்டது. இதற்கமைய கிட்டத்தட்ட 600 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை, சோயா, உழுந்து ஆகிய பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன.

இதன் பிரகாரம் பாவற்குளம் 1ம், 2ஆம் பகுதிகளில் கிட்டத்தட்ட 130 ஏக்கர் அளவில் உழுந்து செய்கை பண்ணப்பட்டது. இதில் பாவற்குளம், உலுக்குளம், செட்டிகுளம் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளைச் சேர்ந்த 127 விவசாயிகள் பங்குபற்றினர்.

அனுராத, MI-01 ஆகிய இனங்களை பயன்படுத்தி மே மாத இறுதிப் பகுதியில் விதைப்பு மேற்கொள்ளப்பட்டு, வெற்றிகரமான முறையில் குறைந்தளவு நீரை பயன்படுத்தி உழுந்து செய்கை பண்ணப்பட்டு கடந்த 15ஆம் திகதி இம்முறை ஆடி மழை விளைச்சலில் பெரிதும் பங்குவகித்தது. விவசாயிகள் 300-400 கிலோ கிராமை ஒரு ஏக்கரில் இருந்து விளைச்சலாக பெற்றுள்ளனர். இதன்மூலம் 80,000/= தொடக்கம் 100,000/= வரையான வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படி அறுவடை விழாவில், வவுனியா மாவட்டத்தின் சகல விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் இருந்தும் 300 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டிருந்தனர். விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில், பாவற்குளத்தினை போன்று ஏனைய குளங்களின் கீழும் இனிவரும் காலங்களில் உழுந்து மற்றும் சிறுதானிய செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி வழங்கினர். (2)

# வீட்டுத்திட்டம் நிறுத்தம்

# மீள்குடியேற்ற அமைச்சருக்கு பெரிய பரந்தன் மக்கள் கடிதம்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் பெரியபரந்தன் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 16 குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் மீள் குடியேற்ற அமைச்சருக்கு பெரிய பரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கத்தினராகிய நாம் மக்கள் சார்பாக தெரியப்படுத்துவது எமது கிராமத்தில் 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை நிரந்தர வீடு கிடைக்காது தற்காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவம், வலுவிழந் தோர் குடும்பங்கள் பெற்றோரை இழந்து தனிமையில் வாழும் பிள்ளைகளின் குடும்பங்களுமாக பலர் காணப்படுகின்றனர்.

இவ்வாறு பல குடும்பங்கள் வாழ்ந்து வரும் கிராமத்தில் புள்ளியடிப்படையில் 16 குடும்பங்கள் வீட்டுத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவான 16 குடும்பங்களின் காணி ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு பல ஒன்றுகூடல்களை நடத்தி, அத்திபாரம் வெட்டி அத்திபார கல் மணல், என்பன கொள்வனவு செய்த பின்னரே முதற்கட்ட பணம் வழங்குவோம். எனவே உடனடியாக இவ்வேலைகளை செய்யுங்கள்.நாம் இதனை பார்வையிட வேண்டும் என பெரியபரந்தன் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து 16 பயனாளிகளும் தங்களுடைய நகைகளையும் வட்டிக்கும் கடனை பெற்றும் வீட்டுத்திட்டத்தின் ஆரம்ப பணிகளை ஆரம்பித்தவர்களுக்கு பேரிடியாக உடனடியாக வேலைகளை நிறுத்துங்கள். இக் காணிகள் அனைத்தும் வயற்காணிகள் எனவும் இதில் நிரந்தர வீடு கட்ட முடியாது என்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டது.

அரசினால் வழங்கப்படும் நிரந்தர வீடு எமக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருபவர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் எமது கிராமத்தில் இதே வயல் நிலங்களில் வாழ்ந்த சுமார் 200 வரையான குடும்பங்களுக்கு அரசின் வீட்டுத் திட்டம் கிடைக்கப்பெற்று வீடுகளையும் முழுமையாக அமைத்து முடித்துள்ளனர்.

எனவே இதன்போது நடைமுறைக்கு வராத சட்டம் இந்த 16 குடும்பங்களுக்கு மட்டும் எவ்வாறு வந்தது? எமது கிராம மக்களின் மேற்படி நிலைமைகளை கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்திட்டத்தினை தாமதிக்காது வழங்குவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(2-312)

## விநாயகர் சதுர்த்தியும் வரிசாபிடேக தினவிழாவும்

இயக்கச்சி முகாவில் பறையோம்பிக்குளம் ஸ்ரீ இராஜ கணபதி ஆலய விநாயகர் சதுர்த்தியும் வரிசாபிடேக தின விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

இதன்போது விநாயகர் வழிபாடு, கும்பபூஜை, அபிஷேகம் மற்றும் சங்காபிஷேகத்துடன் பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-10-136)

# வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் மீட்பு



வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள வயல் காணியில் இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள வயல் காணி நேற்று முன்தினம் மாலை நிலத்தை பண்படுத்தும் போது அப்பகுதியில் வெடிக்காத நிலையில் கைக் குண்டுகள் இருப்பதனை அவதானித்த உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டினையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அப்பகுதியில் கைக்குண்டுகள்-06, பரா- 01 இருந்ததை கண்டு பிடித்தனர், மேலும் அப்பகுதியில் வெடிபொருட்கள் இருக்கலாம் எனக் கருதி நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று அப்பகுதியை மேலும் அகழ்வுப்பணியை மேற்கொள்ள விருப்பதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)

# வீதி செப்பனிடும் பணி தரக்குறைவு

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு



நெடுங்கேணியிலிருந்து ஒதிய மலைக்கூடாக வெலிஓயா செல்லும் ஆர்டீட் பிரதான வீதி மகாவலி திட்டத்தின் கீழ் காப்பெற் வீதியாக செய்யப்படும் நிலையில் இர ண்டு பக்கமும் கிரவல் மண்ணால் நிரவப்பட வேண்டிய நிலையில் தரம் குறைந்த சதுப்புநில களி மண்ணையும் வீதீயோரமாக வெட்டிபோட்டு செப்பனிட்டு வருவதனால் எந்த வேளையிலும் போக்குவரத்து செய்யும் வாகனங்கள் வீதிவிபத்துக்கள் ஏற்படுவதற்கும் விரைவாக வீதி உடைப்பெடுப்பதற்கும் காரணமாக அமையுமென பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் உரியமுறையில் வீதியை பார்வையிடவில்லையென பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். அந்தவகையில் இந்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டுவந்து இதனை செப்பனிட்டு தரும்படி கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ'புரம் சிறையில் உண்ணாவிரதமிருந்த அரசியல் கைதிகள் வவுனியா வந்தனர்

## செப்டெம்பர் இறுதியில் வழக்கு விசாரணை

(குருமன்காடு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகள் நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு தவணைக்காக அழைத்து வரப்பட்டிருந்தனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், இடைக்காடு விக்டர் முதலாம் முகாமில் வைத்து 18 கடற்படை வீரர்கள் மற்றும் 8 இராணுவத்தினருக்கு மரணத்தினை விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள குறித்த 3 அரசியல் கைதிகளும் நேற்று காலை 9 மணிக்கு வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களது வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த நிலையில், 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாத காலப்பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் வைத்து 18 கடற்படை வீரர்கள் மற்றும் 8 இராணுவ வீரர்களுக்கு மரணத்தினை விளைவித்ததாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இராசதுரை திருவருள், மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பகிர்வு பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி மதியரசன் சுலக்சன் மற்றும் கணேசன் தர்சனுக்கும் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி முதலாம் எதிரியான இராசதுரை திருவருளினையும் இவ் வழக்கில் இணைத்து வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் இவ்வழக்கு விசாரணையானது வவுனியா மேல் நீதிமன்றத்தில் திகதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இந்த வழக்கினை நடத்துவதற்கு சிரேஷ்ட அரச சட்டவாதி ஒருவரை நியமித்திருப்பதாகவும், இந்த வழக்கின் சாட்சி ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாகவும் இவ் வழக்கினை வேறு ஒரு நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கான தவணை வழங்குமாறும் கோரப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் நேற்றைய தினத்திற்கு தவணை வழங்கப்பட்டு வழக்கானது நீதிமன்றத்திற்கு அழைத்த போது இந்த வழக்கு தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு மேலதிக கால அவகாசம் தேவை என அரச சட்டவாதியால் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் எதிரிகள் தெரிவித்ததாவது.

இவ்வழக்கானது கடந்த 4 வருடங்களாக இந் நீதிமன்றத்திலே தவணை வழங்கப்பட்டு வருவதாகவும், தாம் 8 வருடங்களும் 3 மாதமும் விளக்கமறியலில் இருந்து வருவதாகவும் இந்த வழக்கு இதுவரை காலமும் விளக்கத்திற்கு எடுக்காததன் காரணமாக தாம் மூவரும் 20.08.2017 ஆம் திகதி முதல் சாகும் வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருவதாகவும் இன்று வரை 4 நாட்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருவதாகவும் இந்த வழக்கானது இந்த நீதிமன்றத்திலேயே இடம்பெறவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் சாகும்வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மன்றினால் சிறைச்சாலை உத்தியோகத்தரிடம் வினவியபோது இந்த எதிரிகள் 3 பேரும் கடந்த 20.08.2017 ஆம் திகதியில் இருந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தெரிவிக்கையில்,

இந்த வழக்கானது கடந்த 4 வருடங்களாக இந் நீதிமன்றத்திலே நடந்து வருகின்றது. இந்த எதிரிகள் கிட்டத்தட்ட கடந்த 8 வருடங்களாக விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். தற்போது உண்ணாவிரதத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்த எதிரிகள் இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு அவர்களது உயிருக்கு ஏதும் ஏற்பட்டால் அது தொடர்பில் நான் பொறுப்புக்கூற வேண்டியவனாக உள்ளேன்.

அத்துடன் பயங்கரவாத தடைக்கட்டளை சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளை அன்றாடம் விளக்கத்திற்கு எடுத்து முடிவுறுத்துமாறு பிரதம நீதியரசரினால் மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த வழக்கினை விசாரணைக்கு நியமிப்பதாகவும் அனைத்து சாட்சிகளுக்கும் அழைப்பு கட்டளை பிறப்பித்ததுடன் வழக்கினை 9 ஆம் மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளுக்கு நியமித்தார். (2-250)




## வரட்சி நிவாரணம் வழங்கவில்லை

# கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்





தமக்கு வரட்சி நிவாரணம் ஏன் வழங்கப்படவில்லை என வவுனியா, பூவரசன்குளம் கிராம அலுவலர் பிரிவு மக்கள் கிராம அலுவலரின் அலுவலகத்திற்கு கேட்க சென்ற போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டமையால் அம் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பூவரசன்குளம் கிராம அலுவலர் பிரிவில் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் வெறும் நூற்றுக்கும் குறைவான குடும்பங்களுக்கே வரட்சி நிவாரணம் வழங்கப்படவுள்ளது. அதற்காக தெரிவு செய்யப்பட்ட மக்களை நிவாரண வேலைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

வரட்சி நிவாரணத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்கள் தம்மை ஏன் புறக்கணித்ததாகவும், தாமும் அப்பகுதியில் தானே வசிக்கின்றோம் எனவும், தமக்கும் வரட்சி தானே என கிராம அலுவலகத்திற்கு சென்று கேள்வி எழுப்பினர். இதனால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டமையால் கிராம அலுவலர் பூவரசன்குளம் பொலிஸாரை அழைத்து மக்களை தனது அலுவலகத்தில் இருந்து வெளியேற்ற முற்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் குறித்த கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்,வரட்சி நிவாரணம் எமக்கும் வேண்டும், வரட்சி நிவாரணம் எவ்வாறு பதியப்பட்டது, அரசே விவசாயிகள் வயிற்றில் அடிக்காதே, கிராம அலுவலரை இடமாற்றுங்கள், அநாகரிகமாக பேசும் கிராம அலுவலர் வேண்டாம், அதிகாரிகளே அநாகரிகமாக நடக்கலாமா என கோசம் எழுப்பியதுடன் தமக்கும் வரட்சி நிவாரணம் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர். (2-250)

# தாதியர் பற்றாக்குறையை நீக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் நீண்ட கால மாக தாதியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தைப்பொறுத்த வரையில் தாதியர்களுக்கு பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது. மற்றைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து தாதிய பயிற்சிக்கு செல்வோர் மிக மிகக்குறைந்தளவேயுள்ளது.

இந்நிலை மாறவேண்டும். தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் பி.தயானந்தரூபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதுவரைகாலமும் அகில இலங்கை ரீதியில் பொதுவான Z புள்ளியின் அடிப்படையிலே தாதியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டு வந்தார்கள். அதனால் எமது மாவட்ட மாணவர்கள் இதற்கு தெரிவாக முடியாமல் இருந்தது.

ஆனால் இம்முறை மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். அதனடிப்படையில் மாவட்டத்தில் அதிகூடிய Z புள்ளி பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க [illegible] ஆலோசனைகளையும் விண்ணப்பப்படிவத்தையும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதிய பரிபாலகரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கான கல்வித் தகைமைகளாக,

A/L-2015 அல்லது 2016 ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் உயிரியல் பிரிவில் உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரு அமர்வில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல். கணிதப் பிரிவில் இணைந்த கணிதம், உயர் கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகியவற்றில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த (சாதாரண தரம்) தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

2017/08/31 ஆம் திகதியில் 18 வயதுக்கு குறையாமல் 28 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

திருமணமாகாதவராக இருக்க வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதியான 31.08.2017 ஆம் திகதிக்கு கிட்டிய மூன்று வருடங்கள் தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்



## திருமதி க.பேரின்பநாயகி அவர்களுடனான சந்திப்பு

யாழ்ப்பாணம் அரியாலை 1951 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21 ஆம் திகதி பிறந்த திருமதி கனகரட்ணம் பேரின்பநாயகி அவர்கள் சிறுவயதிலிருந்தே இசைத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்தார். பின்னாளில் இசை நாடக உலகில் பிரபல்யம் பெற்றவராக விளங்கினார். 1979 ஆம் ஆண்டு அனார்கலி நாடகத்தில் நடித்து நாடகத்துறைக்குள் நுழைந்தார். அரியாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று வரை பண்ணிசை ஓதுபவராகச் செயற்பட்டு வருகின்றார். இலங்கை அரசின் அதியுயர் விருதான கலாபூஷண விருதையும் பெற்றார். திருமதி.க.பேரின்பநாயகி அவர்கள் வலம்புரிக்குத் தெரிவித்த கருத்துக்களைக் கருதுகின்றோம்.

❖ நீங்கள் கலைத்துறைக்குள் எப்படி நுழைந்தீர்கள்?

எனது தாயாரின் தந்தையார் செல்லர். அவரின் சகோதரர் கார்த்திகேசு. இருவரும் இசைத்துறையில் வல்லவராகத் திகழ்ந்தார்கள். இருவருமே நாட்டுக்கூத்து, இசை நாடகம். கிராமியக் கலைகளிலும் வல்லவர்களாகவும் அண்ணாவிமார்களாகவும் விளங்கியவர்கள், எனக்கு இசையில், நாடகத்தில் ஈடுபாடு ஏற்பட இவர்கள் தான் காரணமாக இருந்துள்ளார்கள். 1979 ஆம் ஆண்டு அப்போது எனக்கு 28 வயது. அனார்கலி என்ற நாடகத்தில் நடிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. எங்களூரின் சிறந்த நாடகக் கலைஞர்களான கா.தில்லையம்பலம், பொ.குணசிங்கம் ஆகியோர் அனார்கலி என்ற நாடகத்தில் அரசன் வேடத்தில் நடிப்பதற்காக என்னைக் கேட்ட போது சம்மதித்தேன். அந்த நாடகம் மேடையேறியபோது மிகவும் பாராட்டுதல்களும் புகழும் கிடைத்தன. அதைத் தொடர்ந்து அண்ணாவியார் ச. மார்க்கண்டு அவர்கள் 'சாரங்கதரா' நாடகத்தை மேடையேற்றப்போவதாலும் அதிலே நடிக்க வருமாறு கேட்டு விட்டு ஒரு பாடல் பாடிக் காட்டுமாறு கேட்டார். அப்போது தான் 'வசந்த முல்லை போலே வந்து அசைந்து ஆடும் பெண்புறாவே' என்ற பாடலைப் பாடிக் காட்டினேன். மிகவும் மகிழ்ந்த அவர் எனக்குரிய நாடகப் பிரதியை தந்தார். இது ஒரு இசை நாடகம். இந்த நாடகத்தின் அரங்கேற்றத்தின் போதும் நிறைந்த பாராட்டுதல்களும் வரவேற்பும் எனக்குக் கிடைத்தன. இது எனது முதலாவது இசை நாடகமாக அமைந்ததுடன் தொடர்ந்தும் நாடகங்களில் நடிப்பதற்கான வாய்ப்புகளும் கிடைக்கப்பெற்றன.

❖ நீங்கள் நடித்த நாடகங்கள் மற்றும் கூத்துக்கள் தொடர்பாகக் கூறுங்கள்?

பவளக்கொடி. இந்த நாடகம் கூத்து வடிவிலும் மேடையேற்றப்பட்டது. வீரத்தாய், களத்தில் அரிச்சந்திரன், ஸ்ரீ வள்ளி இந்த நாடகம் புராண இசை நாடகமாக பல மேடைகள் ஏறியது. அதில் இரண்டு பாத்திரங்களில் நடித்துள்ளேன். நாரதராகவும் 'விருந்தன்' ஆகவும் நடித்துள்ளேன். 'அரிச்சந்திர மயானகாண்டம்', 'மாவீரன் சங்கிலியன்', 'பாசச் சுமைகள்', 'இது எல்லாம் விதி அல்ல'

பவளக் கொடி நாடகம் யாழ். திருமறைக்கலாமன்றம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அரங்கு போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டது. இதன்போது சிறந்த நடிகைக்கான விருது கிடைக்கப் பெற்றது. மேலும் இணுவில் மகாஜனாக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கோண் டாவில் நாராயணர் சனசமூக நிலைய அரங்கு, கற் பகப் பிள்ளையார் அரங்கு, வட்டுக்கோட்டை மைதான அரங்கு, விக்கினேஸ்வரா பாடசாலை அரங்கு, சங்கானை பிரதேசமண்டபம் போன்ற இடங்களில் எனது நாடகங்கள் அரங்கேறியுள்ளன. இவற்றைவிட இலங்கை திருப்படத் திற்கு தாய்ப்பாத்திரம் ஒன்றுக்கு பின்னணி குரல் கொடுத்துள்ளேன்.

❖ நீங்கள் கலையுலகில் பெற்ற பட்டங்கள் பற்றிக் கூறுங்கள்?

2015 இல் நல்லூர் பிரதேச செயலகத்தால் வழங்கப்பெற்ற 'கலை ஞானச்சுடர்', 2016 இல் அரியாலை காந்தி சனசமூக நிலையத்தால் வழங்கப்பெற்ற 'இசை நாடக அரசி' இலங்கை அரசால் வழங்கப் பெற்ற 'கலாபூஷணம்' இவை நான் பெற்ற விருதுகளில் குறிப்பிடக்கூடியவை.

❖ நீங்கள் இந்தக் கலையுலகில் பிரகாசிக்க உங்களை முன்னிறுத்தியவர்கள் பற்றிய சொல்லுங்கள்?

அரியாலையூரில் இசை நாடக அண்ணாவியார் அமரர் ச.மார்க்கண்டு அவர்கள் பற்றிச் சொல்ல வேண்டும். சிறந்த குரல் வளம் மிக்கவர். அன்பானவர், பண்பானவர், அவர் எங்களுக்கு நாடகம் பழக்கும் போது எழுபத்தைந்து [illegible]யைக் கடந்த நிலையில் இருந்தார்.

ஆஸ்மா நோயினால் பாதிக்கப்பட்ட நிலையிலும் இந்த இசை நாடகக் கலை தன்னோடு முடிந்து விடக் கூடாது என்ற எண்ணத்தோடு எங்களுக்கு நாடகம் பழக்கியவர். இவர் அமரராகிவிட்டார்.

இது உண்மையிலேயே மனதுக்கு கவலை அளிக்கும் விடயமும். அடுத்தவர் ஆர்மோனிய இசை நாடகக் கலைஞர் நா.சின்னத்துரை. பவளக் கொடி நாடகத்தை எமக்கு பழக்கி பல்வேறு மேடைகளில் அளிக்கை செய்யக் காரணகர்த்தாவாக இருந்தவர்.

பிரபல நாடகக் கலைஞர் மெற்றாஸ் மெயில் அவர்களால் சுண்டுக்குளியில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் பவளக் கொடி நாடகத்தில் நடித்த எனக்கு சிறந்த நடிகைக்கான பரிசு கிடைத்தது. சிறந்த ஆர்மோனியக் கலைஞனாக நா. சின்னத்துரை அண்ணாவியாரின் புதல்வன் சி.கேசவராசா (அமரர்) மற்றும் பேரர்கள் கூட ஆர்மோனியம் மற்றும் வாத்தியக் கருவிகள் வாசிப்பதில் வல்லவர்கள். இன்னுமொருவர் கலைகள் கலாபூஷணம் கா.தில்லையம்பலம் அவர்கள். இவர் எனது மாமன் முறையானவர்.

இவரும் சிறந்த அண்ணாவியார். இவரது பத்மா கலாமன்றத்தினூடாக ஏராளமான கலைஞர்களை முன்னணிக்குக் கொண்டு வந்து பல நாடகங்களை அரங்கேற்றியவர். 'சாவித்திரி சபதம்', 'அரிச் சந்திரா மயானகாண்டம்', 'சிலம்பின் வெற்றி', 'மாவீரன் சங்கிலியன்' போன்ற நாடகங்களில் இவருடன் நடித்துள்ளேன். இவர் அரிச் ந்தி ரனாகவும் நான் சுதந்திரமதியாகவும் நடித்த அரிச் சந்திரமயான கண்டம் 2011 இல் நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட போட்டி நாடகத்தில் முதற் பரிசை வென்றமை குறிப் பிடத்தக்கது. கலைஞர் மு.அருட்பிரகாசம். இவர் பாசையூரைச் சேர்ந்தவர். இவரது நெறியாள்கையில் மாவீரன் சங்கிலியன் நாடகம் அரங்கேற்றம் பெற்றது.

அத்துடன் நாடக உலகில் நான் மிளிர்வதற்கு சகலவழிகளிலும் உதவி அவ்வப்போது நல்ல பல ஆலோசனைகளை வழங்கி ஊக்கப்படுத்திய எனது கணவர் வை.கனகரத்தினம் அவர்கள் மிக முக்கியமானவர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.



## "நாடகத்தில் எனது முதலாவது காட்சி சிம்மாசனத்திலிருந்து இறங்கி வந்து பாடும் காட்சி அது எனக்கு ரசிகர்களிடத்தே பெரும் வரவேற்பை பெற்றுத்தந்தது"

❖ தற்போதைய கலைஞர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது என்ன?

அண்ணாவிமார்கள், இயக்குநர்கள் அன்பானவர்களாக, பண்பானவர்களாக, திறமைசாலிகளாக, நல்ல ஆளுமை உள்ளவர்களாக இருந்தால் நல்ல நல்ல இளங்கலைஞர்களை உருவாக்கி, புதிய புதிய வகையிலான நாடக அளிக்கைகளை வழங்க முடியும். மக்களுக்குச் சொல்ல வேண்டிய விடயங்களை வித்தியாசம் வித்தியாசமான வடிவங்களில் சொல்ல முடியும். ஒரு இரவு முழுவதும் விழித்திருந்து நாடகங்கள் பார்க்க வேண்டிய காலம் மாறிவிட்டது. குறுகிய நேரங்களில் விடயங்களை தெளிவாகவும் இரசனையோடும் சொல்லுதலே தற்போதைய காலத்தின் தேவையாக உள்ளது. அதற்கேற்ற வகையில் கலைஞர்கள் தங்களைத் தயார்படுத்தி கலை நிகழ்வுகளை வழங்குதல் சாலச் சிறந்தது.

❖ தங்கள் கலையுலக வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள்?

நான் நடித்த முதலாவது இசை நாடகம் சாரங்கதரா. இந்த இசை நாடகம் முதல் முறையாக அரியாலை காந்தி சனசமூக நிலைய அரங்கில் மேடையேறியது. அப்போது எங்களூரில் பலருக்கு நான் பாடுவேன் என்றே தெரியாது. அத்துடன் அப்போது பெண்கள் மேடையேறி நடிக்காத காலங்கள். எனக்கு அந்த நாடகத்திலே அரசன் பாத்திரம். அந்தப் பாத்திரம் நாடகத்தின் வில்லன் பாத்திரம். நாடகத்திலே எனது முதலாவது கட்டம், சிம்மாசனத்தில் இருந்து இறங்கி வந்து பாடுங்காட்சி. அதே நேரத்தில் முன் திரை திறக்கப்பட அப்போது அரங்கம் நிறைந்த சனத்திரள். அவர்களின் கரகோசம், விசில் அடிப்புகள் இவையெல்லாம் என்னை மென்மேலும் உற்சாகப் படுத்தின. இந்தக் காட்சியில் எனது மகனுக்குப் பேசிய பெண்ணின் படத்தைப் பார்த்து அந்தப் பெண்ணை தந்தையாகிய நான் திருமணம் செய்தால் என்ன என்ற எண்ணம் வந்து அந்தப் புகைப்படத்தைப் பார்த்து 'வதனமோ சந்திரபிம்பமோ' என்ற பாடலைப் பாடி நடித்தேன். அப்போது ரசிகர்களின் இரசனை, மகிழ்ச்சி, பாராட்டுக்களுக்கு அளவேயில்லை. நாடகம் நிறைவு பெற்றதும் இரசிகர்கள் மேடைக்கு வந்து பாரட்டுக்களைத் தெரிவித்தார்கள். எனது அண்ணாவியார் என் கையைப் பிடித்துக் கொஞ்சி கண்ணீர் சொரிந்தார். எனது கணவரை இளைஞர்கள் தோளில் வைத்து ஆடினார்கள். மறுநாள் பலர் என் வீடு தேடி வந்து பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள். இது என் வாழ்வில் மறக்க முடியாத சம்பவமாகத் திகழ்கின்றது.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சர்வதேச பயன்பாட்டு உளவியல் மாநாடு கொழும்பில்

## பேரா.மார்டின் செலிங்மன் பங்கேற்பு

(கொழும்பு)

கொழும்பு ஆராய்ச்சி மற்றும் உளவியல் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இலங்கை சர்வதேச பயன்பாட்டு உளவியல் மாநாடு இந்த வாரம் கொழும்பில் ஆரம்பமாகின்றது.

உலகப் புகழ்பெற்ற உளவியலாளரும் நேர்மறை உளவியலின் தந்தையுமான பேராசிரியர் மார்டின் செலிங்மன் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றார்.

ஐ-கெப் இலங்கை - 2017 சர்வதேச பயன்பாட்டு உளவியல் மாநாடு இந்த வாரம் கொழும்பில் ஆரம்பிக்கப்படுகின்றது. சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த மாநாடானது 26,27,28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில் இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் மார்டின் செலிங்மன் மாநாட்டில் கலந்து கொள்கின்றார்.

அத்துடன் சர்வதேச நாடுகளின் உளவியல் சார் பேராசிரியர்கள், தத்துவ ஞானிகள், விசேட வைத்தியர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள், உளவியலாளர்கள், உளவியல் தொழில்சார் நபர்கள், சமூக உளவியலாளர்கள், அரசு தொடர்புடைய பிரதிநிதிகள், தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் உலகப் புகழ் பெற்ற உளவியலாளரும் நேர்மறை உளவியலின் தந்தையுமான பேராசிரியர் மார்டின் செலிங்மன் மாநாட்டில் 1964 ஆம் ஆண்டு பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். 1967 ஆம் ஆண்டு பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் தனது கலாநிதி கற்கையை முடித்தார்.

1998 ஆம் ஆண்டு அவர் அமெரிக்க உளவியலாளர் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் 250 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் மற்றும் உண்மையான மகிழ்ச்சி, அசாதாரண உளவியல், ஆர்ப்டிமிஸ்டிக் குழந்தைகள் போன்ற தலைப்புகளில் 20 இற்கும் மேற்பட்ட சுய உதவி புத்தகங்களை எழுதியுள்ளார்.

இவருடைய நூல்கள் பதினொரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இவர் குறிப்பிட்ட சில காலமாக அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தின் இராணுவ வீரர்களிடையே உளவியல் ரீதியான மீள்வரவை உருவாக்குவதற்கான கடமையினை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## தவறவிடப்பட்டுள்ளது

உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிராசா நிமலதாசன் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் நல்லூர் கோயில் சுற்றாடலில் தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 602 6841

(210)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்துநட்சத்திரம்:மகம்<br>கி.பா:34சூரிசெவ் 9 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:CBF, IAB, CIMA, AAT/வங்கியாளர்<br>தொ.இ: B/7658 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பல் வைத்தியர்<br>தொ.இ: G/7667 |
| பிறப்பு: 1982இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 12<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/சாரதி (அரச)<br>தொ.இ: B/7659 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 16<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7671 |
| பிறப்பு: 1986இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் செவ்1ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L / அரேபியா<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும<br>தொ.இ: B/7660 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/7672 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:NITலண்டன் NOT PR<br>தொ.இ: B/7668 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும<br>தொ.இ: G/7673 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வாடகைக்கு வீடு / கட்டடம் தேவை

அறிவியல்நகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்பபீட மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள்/கட்டடங்கள் கிளிநொச்சி திருமுறிகண்டி வீதியை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 11.09.2017 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் உதவிப் பதிவாளர்/நிர்வாகக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பபீட மாணவர்களுக்கான விடுதி வீடு/கட்டடம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517

பதிவாளர்.

**********************************

..............................
..............................

உதவிப் பதிவாளர்/நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

### யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பபீட மாணவர்களின் உபயோகத்திற்கான விடுதி வீடு/கட்டடம்

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ................ ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/கட்டடத்தை பல்கலைக் கழகத்திற்கு குத்தகைக்குத்தர விரும்புகின்றேன்.

வீடு/கட்டடம் பற்றிய விபரங்கள்

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம்
..................................................
..................................................
..................................................

2) வீடு/கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
..................................................
..................................................
..................................................

3) தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும்,தொலைபேசி இலக்கமும்
பெயர் :..................................................
முகவரி: ..................................................
..................................................
தொலைபேசி இல: ..................................................

4) (a) வீட்டின்/கட்டடத்தின் பரப்பளவு (சதுர அடி) ..............................
(b) வீடு/கட்டடம் அமைந்துள்ள காணியின் பரப்பளவு ..............................

5) அறைகளின் எண்ணிக்கை ....................
குளியல் அறைகளின் எண்ணிக்கை ....................
மலசல கூடங்களின் எண்ணிக்கை ....................

6) மின்சார வசதி உண்டு/இல்லை ..............................
விபரம் ..............................

7) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர்
விபரம் ..............................

8) எதிர்பார்க்கும் குத்தகை/மாதாந்த வாடகை ..............................
(வீடு/கட்டட பராமரிப்பு தொடர்பான செலவுகள் உள்ளடங்கலாக)

9) குத்தகைக்குத் தரக்கூடிய கால அளவு ..............................

10) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்)..............................
..................................................
..................................................

திகதி .................... ..............................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-9405)


# இலங்கை பிரஜைகளுக்கு சட்டரீதியில் வேலைவாய்ப்பு வழங்கும் லெபனான்

(கொழும்பு)

தமது நாட்டிற்குள் சட்டவிரோதமான முறையில் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள இலங்கை தொழிலாளர்களுக்கு முறையான ஆவணங்களுடன் கூடிய சரியான தொழில்களை வழங்குவதற்கு லெபனான் அரசு தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



லெபனான் நாட்டின் பிரதமர் ஸாத் ஹரீரியுடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த இணக்கப்பாட்டுக்கு வந்ததாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. அமைச்சர் வீட்டுக்கு சென்று வந்த சசிகலா

## ரூபா அறிக்கையில் புதிய தகவல்



(பெங்களூர்)

பெங்களூர், சிறையில் இருந்து வெளியேறி சசிகலா அ.தி.மு.க. அமைச்சர் வீட்டுக்கு சென்று வந்தார் என ரூபா தாக்கல் செய்துள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் சசிகலாவுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பாக விசாரணை நடத்திய அதிகாரி முன் டி.ஐ.ஜி. ரூபா புதிய ஆதாரங்களை சமர்ப்பித்தார். அதில் சசிகலா சிறையில் இருந்து சல்வார் அணிந்து கையில் பையுடன் சென்று வரும் வீடியோ இடம் பெற்று இருந்தது. இது மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சசிகலா சிறையில் இருந்து வெளியேறி சிறைச்சாலைக்கு அருகில் இருக்கும் ஓசூர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. வீட்டுக்கு சென்று வந்திருக்கலாம் என்று தனக்கு நம்பத்தகுந்த தகவல் கிடைத்து இருப்பதாக ரூபா தெரிவித்துள்ளார். இதை அவர் கடந்த சனிக்கிழமை சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சிறையில் நுழைவு வாயிலில் முதலாவது வாசலுக்கும் 2ஆவது வாசலுக்கும் இடையில் உள்ள கண்காணிப்பு கமெராக்களில் சசிகலா வெளியில் சென்று வரும் காட்சிகள் பதிவாகி இருப்பதாகவும், இதன் மூலம் சசிகலா சிறைச்சாலைக்குச் அருகில் உள்ள ஓசூர் எம்.எல்.ஏ. வீட்டுக்குத்தான் சென்றிருப்பார் என்றும் ரூபா குறிப்பிட்டுள்ளார். இது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்றும் ரூபா கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது தமிழக அமைச்சரவையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக இருக்கும் பாலகிருஷ்ண ரெட்டிதான் ஓசூர் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு பெங்களூர் சிறைச்சாலை அருகில் உள்ள பகுதியில் வீடு இருப்பதாகவும், அவரது வீட்டுக்குத் தான் சசிகலா சென்று வந்ததாகவும் கூறப்படும் ரூபாவின் புதிய குற்றச்சாட்டு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது போல் டி.ஐ.ஜி. ரூபா புதிய சர்ச்சையையும் கிளப்பி உள்ளார். கர்நாடக சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் அனைவரும் சிறைக் கைதிகளுக்கான உடைகள் தான் அணிந்து உள்ளனர். சசிகலாவும், இளவரசியும் கைதிகள்தான் அவர்களுக்கு மட்டும்சேலை, சல்வார் போன்ற சொந்த உடைகள் அணிய அனுமதித்தது ஏன் என்றும், சிறைச்சாலையில் அவர்களுக்கு 'ஏ' கிளாஸ் வசதிகள் மற்றும் தனி உணவுகள் வழங்கியது ஏன் என்றும் விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (3-8)

# இரண்டு வருடங்க... கருணாநிதியை சந்தித்...



(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதியை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேற்று முன்தினம் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார். இதனால் தி.மு.க வுடன் கூட்டணி ஏற்படலாம் என கூறப்படுகிறது.

அரசியல் தளம் பல திருப்பு முனைகளை ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏற்படுத்தும். அப்படித்தான் பிரிக்க முடியாத உடன்பிறவா அண்ணன் தம்பிகளான கருணாநிதி-வைகோவை அரசியல் பிரித்தது. அதனால் 1995இல் ம.தி.மு.கவை வைகோ உருவாக்கினார். உறவு முறிந்து இருவரும் எதிர் எதிர் திசையில் பயணித்தார்கள்.

3 ஆண்டுகளுக்கு பிறகு சென்னை விமான நிலையத்திற்கு வந்த அப்போதைய பிரதமர் வாஜ்பாயை வரவேற்க முதல்வராக இருந்த கருணாநிதியும் சென்றார். பா.ஜனதா கூட்டணியில் இருந்ததால் கூட்டணி கட்சி தலைவர் என்ற அடிப்படையில் வைகோவும் அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்



டார். அப்போது கருணாநிதியும், வைகோவும் பிரிவுக்கு பிறகு முதல் முறையாக சந்தித்தனர்.

# பாரதம்

# ஆப்கானில் கடைசி அமெரிக்கர் இருக்கும்வரை யுத்தம் நீடிக்கும்

## தலிபான் அமைப்பு எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவ வீரர்களை அதிகரிக்கும் ஜனாதிபதி ட்ரம்பின் முடிவுக்கு தலிபான் அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில், தலிபான் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையே கடந்த 15 ஆண்டுகளாக போர் நடைபெற்று வருகிறது. இந்த போரில் ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவாக அமெரிக்கா உதவி வருகிறது.

இந்நிலையில், நேற்று 4 ஆயிரம் அமெரிக்க துருப்புகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார். மேலும், அவர்கள் காலவரையறையின்றி போர் முடிவடையும் வரை ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருப்பார்கள் எனவும் அவர் கூறினார்.

ட்ரம்பின் இந்த முடிவுக்கு ஆப்கான் பிரதமர் வரவேற்பு தெரிவித்துள்ளார். ஆனால், ட்ரம்பின் இந்த உத்தரவிற்கு தலிபான் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜகிபுல்லா முஜாகித் கூறியதாவது.

ஆப்கானிஸ்தானில்போரை தொடர்வதற்கு பதிலாக, அமெரிக்கா தனது படைகளை திரும்பப் பெற யோசிக்க வேண்டும்.

எங்கள் நாட்டில் கடைசி ஒரு அமெரிக்க இராணுவ வீரர் இருக்கும்வரை, நாங்கள் எங்கள் யுத்தத்தை தொடருவோம் என்றார். (3-8)

# அமெரிக்க போர் விமானங்கள் ரக்கா நகரின் மீது குண்டுமழை

## 19 குழந்தைகள் உட்பட 42 பேர் பலி

(டமாஸ்கஸ்)

ரக்கா நகரில் முகாமிட்டுள்ள ஐ.எஸ்.தீவிரவாதிகளை குறிவைத்து அமெரிக்க போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 19 குழந்தைகள், 12 பெண்கள் உட்பட 42 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த சில ஆண்டுகளாக ஆயுதப் புரட்சி நடந்து வருகிறது. அரசுப் படைகள் மற்றும் போராளி குழுக்களுக்கு இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் சுமார் 3 இலட்சம் மக் கள் பலியாகியுள்ளனர்.

இதற்கிடையில், சிரியாவின் சில முக்கிய நகரங்களை ஆக்கிரமித்த ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்கு ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்களை தீர்த்துக்கட்டும் பணியில் அரசுப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ரஷ்ய நாடுகளின் விமானப் படைகள் அவ்வப்போது வான்வழி தாக்குதலில் ஈடுபடுகின்றன.

இந்நிலையில், ரக்கா நகரில் முகாமிட்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து அந்நகரின் மீது அமெரிக்க போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இரண்டாம் நாளாக நடைபெற்ற இந்த தாக்குதலில் ரக்கா நகரை ஒட்டியுள்ள பகுதியை சேர்ந்த 19 குழந்தைகள், 12 பெண்கள் உட்பட 42 பேர் உயிரிழந்ததாக சிரியா போர் நிலவரங்களை கண்காணித்துவரும் நடுநிலையாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-8)


# ரூபா 650 கோடி செ... விடுமுறையை கழித்த...

(டேன்ஜியர்)

மொராக்கோ நாட்டில் விடுமுறையை கழிக்க சவுதி மன்னர் ரூ.650 கோடி (100 மில்லியன் டொலர்) செலவு செய்தார். அது சவுதி அரேபியாவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

சவுதி அரேபிய மன்னர் சல்மான் இந்த ஆண்டு தனது கோடை விடுமுறையை மொராக்கோ நாட்டில் கழித்தார்.

அங்குள்ள டேன்ஜியர் நகரில் அவருக்கு சொந்தமான ஆடம்பர அரண்மனை உள்ளது. இது 74 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அங்கு அவர் ஒரு மாத காலம் தங்கியிருந்தார்.



அவருக்கு பணிவிடை செய்ய 200 கார்கள் எந்த நேரத்திலும் தயார் நிலை யில் இருந்தன.

# பாகிஸ்தானை போல தீவிரவாதத்திற்கு எதிராக யாரும் போராடுவது இல்லை

## பாக்.வெளியுறவு அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

தீவிரவாத இயக்கங்களுக்கு உதவுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளதை தொடர்ந்து, பாகிஸ்தானை போல யாரும் தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டது இல்லை என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெற்காசியாவுக்கான புதிய கொள்கையை நேற்று முன்தினம் வெளியிட்டார்.

அதில், தலி பான்களை ஒழித்துக்கட்டும் வகையில் ஆப்கானிஸ்தானுக்கு கூடுதல் படைகளை அனுப்ப முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...களின் பின் ...த்த வைகோ

அந்த சந்திப்பு தான் அரசியல் ரீதியாக பிரிந்து இருந்தாலும் இருவருக்கிடையேயான நட்பு பட்டுப் போகாமல் இருப்பதை உறுதிப் படுத்தியது.

அதன்பிறகு காஞ்சிபுரத்தில் ம.தி.மு.க. நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில், கருணாநிதி பங்கேற்றார். அப்போது அண்ணாவின் அகல் விளக்கை தம்பி வைகோ அணையாமல் ஏற்றி வைத்துள்ளார் என்று பாராட்டினார்.

13 மாத வாஜ்பாய் ஆட்சி நம்பிக்கை வாக்கெடுப்பில் ஒரு வாக்கில் கவிழ்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த தேர்தலில் கூட்டணி கட்சிகள் மாறியது. பா.ஜனதா கூட்டணியில் ம.தி.மு.கவும், தி.மு.க.வும் இடம்பெற்றன.

பாராளுமன்ற தேர்தலில் இமாலய வெற்றி பெற்றன. அதன் பிறகு பொடா சட்டத்தில் சிறை சென்ற வைகோ



பிணையில் வெளிவர மாட்டேன் என்று உறுதியாக இருந்தார்.

பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்துக்கு நேரில் சென்று வைகோவை கருணாநிதி சந்தித்தார். அவரது வற்புறுத்தலால் பிணையில்வர ஒத்துக் கொண்டர்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு நீடித்த நட்பு தான் கூட்டணிக்கும் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கியது. கருணாநிதி பேரன் திருமண விழாவில் பங்கேற்ற வைகோ உணர்ச்சி ததும்ப பேசினார். அப்போது கூட்டணி உருவாகும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அரசியல் காரணங்க ளால் அப்போது தி.மு.க., ம.தி.மு.க. கூட்டணி உருவாகவில்லை.

தற்போது தமிழகத்தின் அரசியல் சூழல் மாறி இருக்கின்றது. பா.ஜனதாவை காலூன்ற விடாமல் தடுக்க தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் முயற்சி எடுத்து வருகின்றன.

இந்த நிலையில் தி.மு.க., தலை வர் கருணாநிதியின் உடல் நலம் பற்றி விசாரிக்க வைகோ சென்றார். இந்த சந்திப்பு மிகவும் நெகிழ்ச்சியுடன் இருந் ததாக வைகோ உணர்ச்சி பொங்க தெரிவித்தார்.

என்னைப் பார்த்ததும் கருணாநிதி பேச முயற்சித்தார். எனது கையை அவர் பிடித்துக்கொண்டார். விடவே இல்லை. அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் அழுது விட்டேன் என்றார்.

சுமார் 35 நிமிடங்கள் கோபாலபுரம் இல்லத்தில் இருந்த வைகோ மு.க.ஸ்டாலினுடன் கைகளை கோர்த்தபடி சிரித்து பேசிக் கொண்டிருந்தார்.

ஏற்கனவே விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் கருணாநிதியை சந்தித்து வந்தார். இப்போது வைகோவும் சென்றுள்ளார்.

எனவே வைகோ தி.மு.க. கூட்டணியில் இடம் பெறுவார் என்று தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. வட்டாரத்தில் கூறப்படுகிறது. (3-8)

# பாகிஸ்தானுக்கு கண்டிப்பு

## ட்ரம்ப் பேச்சுக்கு இந்தியா வரவேற்பு

(டில்லி)

தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதாக கூறி பாகிஸ்தானை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கண்டித்துள்ளதற்கு இந்தியா வரவேற்பு அளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அந்த நாட்டு மக்களுக்கு செய்தி விடுத்து கடந்த திங்கட்கிழமை தொலைக் காட்சியில் பேசினார். அப்போது அவர் பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளிப்பது குறித்து குறிப்பிட்டு கடுமையாக எச்சரித்தார். ஆப்கானிஸ்தானில் ஸ்திரத் தன்மை ஏற்படுவதற்கு இந்தியா ஆற்றி வருகிற பங்களிப்பை பாராட்டினார். ட்ரம்பின் இந்த கருத்துக்களை இந்தியா வரவேற்றுள்ளது.

இது குறித்து வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரவீஷ் குமார் நேற்று முன்தினம் கூறுகையில், " இந்த கவலைகளை, நோக்கங்களை இந்தியா பகிர்ந்து கொள்கிறது. ஆப்கானிஸ்தானில் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, வளம் ஆகியவற்றை கொண்டு வருவதில் அந்த நாட்டின் அரசுக்கும், மக்களுக்கும் இந்தியா ஆதரவு அளிப்பதில் உறுதியாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையே ட்ரம்ப், பாகிஸ்தானை கண்டித்துள்ள நிலையில், அந்த நாட்டுக்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுபற்றி சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஹுவா சுன்யிங் கூறுகையில், "பங்கரவாதத்துக்கு எதிராக முன்வரிசையில்நின்று பாகிஸ்தான் போராடுகிறது" என்று குறிப்பிட்டார். (3-8)



# உ.பியில் ரயில் விபத்து

## 60 பேர் காயம்

(லக்னோ)

டில்லியிலிருந்து அஸம்கார் செல்லும் கைபியாத் விரைவு ரயில் உத்தரப் பிரதேசம் மாநிலம் கான்பூர் அருகே நேற்று அதிகால்லை தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 60 பேர் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தலைநகர் டில்லியிலிருந்து உத்தரப்பிரதேசம் மாநிலம் அஸம்காருக்கு கைபியாத் விரைவு ரயில் இயக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கான்பூர் - எட்டாவா அருகே ரயில் வந்து கொண்டிருந்த போது திடீரென சில பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு இறங்கி தடம் புரண்டது.

ரயில் இயந்திரம் உள்ளிட்ட 8 பெட்டிகள் தடம் புரண்டுள்ளதாகவும், ஒரு பெட்டி தலைகீழாக கவிழ்ந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த விபத்தில் சுமார் 60 பயணிகள் காயமடைந்துள்ளதாகவும், அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப் பட்டுள்ளதாகவும் ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ரயில் விபத்து குறித்து தகவல் பெற உதவி எண்களையும் ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. சில நாட்களுக்கு முன்னர் அம்மாநிலத்தின் முசாபர் நகர் அருகே உத்கல் விரைவு ரயில் விபத்துக்குள்ளானதில் 21 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# வெளிநாடு

# ...சலவில் ...ந மன்னர்



மன்னரின் வருகையை முன்னிட்டு கடந்த ஒரு ஆண்டுகளாக அரண்மனை புதுப்பிக்கப்பட்டது. அங்கு புதிதாக ஹெலிகொப்டர்தரை இறங்கும் வகையில் புதிய தளம் அமைக்கப் பட்டது. புதிதாக சில குடியிருப்புகளை யும் கட்டியுள்ளனர்.

முன்னதாக மொராக்கோ வந்து இறங்கிய மன்னரை அந்நாட்டு பிரதமர் சதேதின் ஆத்மானி விமான நிலையம் வந்து வரவேற்றார். மேலும் பாதுகாப்புக்காக மொராக்கோவின் 30 பேர் கொண்ட சிறப்பு படையும் வழங்கப்பட்டது.

மொராக்கோ நாட்டில் மன்னர் சல்மான் தங்கியிருந்த போது ரூ.650 கோடி (100மில்லியன் டொலர்) செலவு செய்யப்பட்டது. அது சவுதி அரேபியாவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில் மன்னர் சல்மானின் வருகையால் மொராக்கோ நாட்டின் சுற்றுலா வருவாயில் 1.5 சதவீதம் அதிக இலாபம் கிடைத்துள்ளது. (3-8)

...வெடுக்கப்பட்டிருந்தது.

மேலும், தலிபான்கள், ஹக்கானி உள்ளிட்ட தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் மறைமுகமாக உதவுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து தடைசெய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக செயற்படும் பட்சத்தில் கடும் விளைவுகளை பாகிஸ்தான் எதிர்க்கொள்ள வேண்டி வரும் எனவும் டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலை யில், இது குறித்து பேசியுள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கவாஜா ஆசிப், பாகிஸ்தானை போல தீவிரவா தத்திற்கு எதிராக யாரும் போரிட்டது இல்லை எனக் கூறியுள்ளார்.

மேலும், அமெரிக்காவின் புதிய கொள்கை குறித்து அமைச்சரவை யைக் கூட்டி விவாதிக்க உள்ளோம்.

ஆப்கானிஸ்தானில் அமைதி மற்றும் நிலைத் தன்மை என்பதே பாகிஸ்தானின் நோக்கம் மற்றும் ஆசையாகும் என தெரிவித் துள்ளார். (3-8)

# பாகிஸ்தானில் கனமழை

## 2 நாட்களில் 24 பேர் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெய்த கனமழையால் கராச்சியில் கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 24 பேர் பலியாகினர்.

பாகிஸ்தானில் கடந்த திங்கட்கிழமை முதல் கன மழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும் வீடுகளில் வெள்ள நீர் புகுந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது.

இந்த வெள்ளத்தால் பாகிஸ்தானில் உள்ள சித் மாகாணத்தின் தலைநகரான கரா ச்சி நகரில் மட்டும் 24 பேர் பலியாகினர். அவர்கள் மின்சாரம் தாக்கியும் வெள்ளத்தில் மூழ்கியும் மற்றும் வீட்டின் இடிபாடுகளில் சிக்கியும் இறந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மழையால் பல இடங்களில் மின்சாரம் துண்டிக் கப்பட்டது. இதனால் மக்கள் இரண்டு நாட்களாக இருட்டில் இருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மின்சாரம் இல்லாத நிலையில், தண்ணீர் வசதியும் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கராச்சி மற்றும் பாகிஸ்தானின் மற்ற பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு கன மழை பெய்யும்என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (3-8)

# வெள்ளை மாளிகை தற்காலிகமாக மூடல்

## தீவிர சோதனை

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரபூர்வமான இல்லமான வெள்ளை மாளிகையின் வளாகத்தில் சந்தேகத்திற்குரிய பொதி கண் பகுதியில் உள்ள வேலி அருகே சந்தேகப்படும் வகையில் மர்மப்பை கிடந்துள்ளது.

இதனையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் வெள்ளை மாளிகையை தற்காலிகமாக மூடி தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். அப்பகுதியில்



டெடுக்கப்பட்டுள்ளதால் தற்காலிகமாக வெள்ளை மாளிகை மூடப்பட்டு தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரப்பூர்வ இல்லமான வெள்ளை மாளிகை வோஷிங்டன் நகரில் உள்ளது. இந்நிலையில், உள்ளூர் நேரப்படி பகல் 1.30 மணியளவில் வெள்ளை மாளிகையின் வடக்குப் உள்ள வீதிகள் மூடப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த சம்பவம் நடைபெற்ற நேரத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் இல்லை. அரிசோனா மாகாணத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்காக சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 84 பேர் மீது நீதிமன்றங்களில் வழக்கு

## அரசாங்கம் விசேட அறிக்கை

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச்சட்டத்துடன் தொடர்புடைய வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அதேவேளை 84 பேர் இன்னமும் சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மேலும் 12 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸாரின் விசாரணை அறிக்கைகளை ஆராய்ந்து வருகிறது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கான முயற்சி, முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே படுகொலை, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மீதான படுகொலை முயற்சி, அநுராதபுரவில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 29 பேர் தற்கொலை குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்களுக்கு சூழ்ச்சி செய்தமை, உதவி செய்தமை, உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளே தற்போது விசாரணையில் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கைக்கான கனடாவின் புதிய தூதுவராக மக்கினொன்

(கொழும்பு)



இலங்கைக்கான கனடாவின் புதிய தூதுவராக, மக்கினொன் நியமிக்கப்படவுள்ளார். கனேடியத் தூதுவராக பணியாற்றிய ஷெல்லி வைற்றிங் அண்மையில் தமது பணியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருந்தார்.

இதையடுத்தே, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான கனடாவின் புதிய தூதுவராக மக்கினொன் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அவரது நியமனம் உறுதி செய்யப்பட்டதும் கொழும்பில் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# ரஷ்யாவுடன் ராணுவ ஒத்துழைப்பை விரிவாக்குவதில் இலங்கை ஆர்வம்



ரஷ்யாவில் நடக்கும் 'ராணுவம்-2017" என்ற அனைத்துலக பாதுகாப்பு கண்காட்சி, அனைத்துலக ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் என்று இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

'ராணுவம்-2017" என்ற அனைத்துலக ராணுவ-தொழில்நுட்ப கண்காட்சி, ரஷ்யாவின் அலபினோ இராணுவ பயிற்சி மைதானம், குபின்கா விமான ஓடுதளம், தேசப்பற்று அவை மற்றும் மொஸ்கோ பிராந்திய கண்காட்சி மையம் ஆகியவற்றில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

உலகின் பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு குழுக்கள் இந்த கண்காட்சியில் பங்கேற்றுள்ளன. இலங்கை தரப்பு குழுவுக்கு பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன தலைமை தாங்குகிறார்.

கண்காட்சியில் பங்கேற்றுள்ள இலங்கைப் பாதுகாப்புச் செயலர் ரஷ்யாவின் ஸ்புட்னிக் நாளிதழிடம் கருத்து வெளியிடுகையில்,

"ரஷ்யாவிடம் உள்ள ஆயுதங்களைப் பார்வையிடுவதற்காக வந்திருக்கிறோம். ரஷ்யாவிடம் ஆயுதங்களை வாங்கிய அனுபவம் இலங்கைக்கு உள்ளது.

இங்கு வந்திருப்பது நல்ல வாய்ப்பாகும். இந்த கண்காட்சி மிகவும் சுவாரசியமாக உள்ளது. நான் இதுவரை பார்த்திராத, கேள்விப்பட்டிராத கண்காட்சியாக மட்டுமல்ல, நாம் சில அறிவுகளை பெற்றுக் கொள்ளவும், அனைத்துலக ஒத்துழைப்பை விரிவாக்கவும் இது உதவும்.

ரஷ்யாவின் போர்க்கப்பல்களில் இலங்கை ஆர்வம் கொண்டிருந்தது. அது தொடர்பாக கலந்துரையாடப்படுகிறது. இந்த நேரத்தில் நாங்கள் கப்பல்களை வாங்குகிறோம். அது பற்றிய பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தீவிரவாத முறியடிப்புத் தொடர்பாக, ரஷ்யாவின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும், ஏனைய நாடுகளிடம் பகிர்ந்து கொள்ளவும், அவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ளவும் இலங்கை விரும்புகிறது" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கிராம சேவகர் சங்கம் எச்சரிக்கை

அரசு சார்பாக மக்களுடன் நேரடியாக தொடர்பை பேணும் கிராம உத்தியோகத்தர்கள் தமது தொழில் ரீதியில் பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். எனவே அது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாது போனால்தாம் விரைவில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை கிராம சேவகர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜயரத்ன தெரிவித்தார்.

இலங்கை கிராம சேவகர் சங்கம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அதே நினைவாக இருக்கிறீர்களா?

சில பேர் சுயிங்கத்தை மெல்லுகுற மாதிரியும் மாடு அசை போடுகிற மாதிரியும் ஒன்றைப் பற்றியே திரும்பத் திரும்பச் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்.

பெரும்பாலும் இச்சம்பவங்கள் அல்லது நினைவுகள் இவர்களை ரொம்பவும் பாதித்திருக்கலாம் (Affect or Effect) இத்தகைய பாதிப்புகளிலிருந்து சீக்கிரமே மீண்டு வருவதற்கு நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

ஒரு பெண்மணி தன் இறந்த குழந்தையை நினைத்து நினைத்து வருந்துவதாக இருந்தாலும் சரி, ஒருவர் தனக்கு ஒரு பெரிய அரங்கில் நடத்தப்பட்ட பாராட்டுக் கூட்டத்தை எண்ணி எண்ணி மகிழ்வதாக இருந்தாலும்சரி இரண்டிற்குமே ஏகமாய் முக்கியத்துவம் கொடுத்து மரவட்டை போல் சுருண்டு போவதோ தரையில் கால்படாமல் நடப்பதோ கூடாது.

ஒரு மனிதனின் வாழ்க்கை ஒரு பாராவில் சொல்லப்படும் போது இவையெல்லாம் நிச்சயமாக இடம்பெறாமல் போகக்கூடிய பலவீனம் படைத்த சம்பவங்கள். அப்படி இருக்கும் போது இவற்றுக்கெல்லாம் நிரந்தரத்துவம் கொடுப்பது தகாது.

கலைந்து போய்க் கடந்து விடும் மேகங்களை நிரந்தரமாகச் சூழ்ந்த இருள் என எண்ணுவதும், நம் காட்டில் தான் மழை என எண்ணுவதும் பேதமையே தவிர, வேறல்ல.

நாம் அவமானப்படுத்தப்பட்ட சம்பவம்; நமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்; பறிபோன சொத்து என எது நடந்தாலும் அவற்றையே திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்து முடங்கி விடக் கூடாது.

மெல்ல அவற்றை மறக்க வேண்டும்.

என்னால் முடியலை; எவ்வளவோ முயற்சி பண்ணியும் முடியலை என்கிற வழக்கமான வசனத்தை விட்டுத் தொலைத்து விட்டு ஆட்டோ சஜஷன் முறையில் பரவாயில்லை. நான் அப்போது இந்த நினைப்பிலிருந்து மெல்ல மீண்டு வருகின்றேன்; நேற்றைக்கு ஒப்பிடும் போது இன்று நான் பரவாயில்லை. நாளை இன்னும் ஒருபடி முன்னேறிவிடுவேன் என்பது போல அவரவர்களுக்குத் தகுந்த முறையில் பிடித்த பாணியில் மனதிற்குள்ளும் கேட்கிறவர்களிடத்தில் மனம் விட்டுச் சொல்லியும் வர வேண்டும்.

இம்முறை அபாரமான பலனைத் தரும்.

கவனத்தை மெல்ல திசை திருப்ப வேண்டும். மனம் லயிக்கும் நல்ல விடயங்களில் ஈடுபட வேண்டும். எந்த நேரமும் ஏதேனும் வேலை இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். 'சும்மா' இருக்கவே கூடாது. இருந்தாலும் தொலைந்தது - பிளாஷ்பேக் அரக்கன் கொல்ல ஆரம்பித்து விடுவான்.

இறந்து போன நினைவுகளைக் கிளறுவதும் அவற்றிற்கு உயிரூட்டுவதும் நிகழ்காலத்தை மட்டுமல்ல, எதிர்கால வளர்ச்சியையும் வாழ்வையும் குழிதோண்டிப் புதைப்பதாகும்.

இப்படிப்பட்ட மாபெரும் தவறைத் தொடர்ந்து செய்யத் தான் வேண்டுமா?

**லேனா தமிழ்வாணன்**

# 'மங்களவின் மங்களகரமான பட்ஜெட்டை மக்களே ஆர்வத்துடன் எதிர்பாருங்கள்'

## அமைச்சர் சஜித் மெச்சுதல்

(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் மங்களகரமான வரவு - செலவுத் திட்டம் பல நிவாரணங்களை கொண்டதாக அமையும். ஆகவே அமைச்சர் மங்களவின் மங்களகரமான பட்ஜெட்டை மக்கள் ஆர்வத்துடன் எதிர்பாருங்கள் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நல்லாட்சி அரசாங்கத்தினால் வீடமைப்பு திட்டத்திற்கு பெரும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. வீடமைப்பு செயற்பாடுகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் முன்னைய ஆட்சியின் போது வீடுகள் நிர்மாணிப்பதற்கு எந்தவொரு வேலைத் திட்டமும் இருக்கவில்லை. மக்களின் பணமும் உடைமைகளும் பெருமளவில் கொள்ளையடிக்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் அப்பாவி மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப முன்னைய ஆட்சியினருக்கு எந்தவொரு கொள்கையும் திட்டமும் இருக்கவில்லை. என்றாலும் தன்னுடைய குடும்பத்தினருக்கு மாத்திரம் வீடுகளும் சொகுசான வாழ்க்கையும் பெற்றுக் கொடுத்தனர். ஆனால் அப்பாவி மக்கள் வீதிகளில் துன்பத்துடன் கிடந்தன.

எனினும் நல்லாட்சி அரசாங்கம் வந்த பிறகு வீடமைப்பு துறையை பலப்படுத்தி வாழ்வதற்கு வசதியில்லாமல் வாடும் மக்களுக்கு நிவாரணங்களையும் பெற்றுக் கொடுத்து வீடுகளையும் வழங்கி வருகின்றோம். எனினும் எமது இரு வருட ஆட்சியை இருள் சூழ்ந்தது என கூறுகின்றனர். எனினும் முன்னைய பத்து வருடங்களே இருள் சூழ்ந்த காலம் என்பதனை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

அத்துடன் அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்தில் வீடமைப்பு துறைக்கு மங்கள சமரவீர முக்கியத்துவம் வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றேன். நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் மங்களகரமான வரவு செலவுத் திட்டம் பல நிவாரணங்களை கொண்டதாக அமையும். மேலும் முன்பு நாட்டின் வளங்களை மோசடி செய்த அரசியல்வாதிகளுக்கு பாடமாக அமையும். ஆகவே அமைச்சர் மங்களவின் மங்களகரமான பட்ஜெட்டை மக்கள் ஆர்வத்துடன் எதிர்பாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கூரைக்கு தங்கமுலாம் பூச ரூ.45 மில்லியன் ஒதுக்கீடு



(கொழும்பு)

வரலாற்று புகழ்மிக்க கண்டி தலதா மாளிகையின் தங்கக் கூரைக்கு தங்க முலாம் பூசுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 45 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

மல்வத்து, அஸ்கிரி மகா நாயக்க தேரர்களின் கோரிக்கைக்கமைய ஜனாதிபதி இந்த நிதிக்கான காசோலையை நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கண்டி மாவட்ட செயலாளர் எம்.எம்.பீ.ஹிற்றிசேகரவிடம் வழங்கினார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவால் ஸ்ரீ தலதா மாளிகைக்கு காணிக்கையாக வழங்கப்பட்ட தங்கக்கூரை புனித தாது பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மண்டபத்திற்கு மேலாக அமைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நோய்த் தடுப்பு பிரிவை பலப்படுத்த நடவடிக்கை

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

சுகாதாரத்துறையின் எதிர்கால திட்டமிடலின் போது நோய்த் தடுப்புப் பிரிவை பலப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அதற்கமைய சுகாதார மருத்துவ அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார அலுவலர்களின் சேவைகளுக்கு தற்போது இருப்பதனை விடவும் கூடுதலான வசதிகளை வழங்கி, அந்த சேவைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்ற பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் 82 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்தியசாலைக்குதேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்கி, சிகிச்சை பிரிவுகளை பலப்படுத்துவதற்கு பெருமளவு முதலீட்டை செய்த போதிலும் நோய்த்தடுப்பு பிரிவுகளுக்காக ஒதுக்கப்படும் நிதி போதுமானதல்ல என்பது தெரிய வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பான முதன்மை சுட்டியான ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் செயற்பாடுகளில் நோய் தடுப்பு பிரிவு பலப்படுத்தப்படுவது இன்றியமையாததென ஜனாதிபதி தெரிவித்தார்.

விமர்சனங்கள், அவதூறுகள் மட்டுமன்றி சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட சிலரது இடையூறுகளின் மத்தியிலும் தமது சேவையை உரியவாறு நிறைவேற்றும் பொது சுகாதார பரிசோதகர்களின் பணியை பாராட்டிய ஜனாதிபதி, அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது மக்களுக்கு உதவியளித்தல் மற்றும் கழிவகற்றல் பிரச்சினை தொடர்பிலும் அவர்கள் ஆற்றிய பணியை பாராட்டியதுடன், பொது சுகாதார பரிசோதகர்கள் நாட்டு மக்களின் பாராட்டுக்குரிய சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

## பொகவந்தலாவை பாலகியின் தீக்காயம் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணை

பொகவந்தலாவை குயினா தோட்டக் கீழ் பிரிவைச் சேர்ந்த இரண்டு மாதமேயான குழந்தை அனுஷா குமாரிபாரிய தீக்காயங்களுக்குள்ளான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குழந்தையின் தாயாரிடம் விசாரணையை முன்னெடுக்க பொலிஸார் கண்டி வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் செய்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தீக்காயங்களுடன் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த குழந்தை பின்னர் கிளங் கன் மற்றும் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப் பட்டார்.


தான் வீட்டு வேலைகளைக் கவனித்த போது தன்னுடைய குழந்தை அடுப்பில் தவறி விழுந்ததாக பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் தாயாரினால் வாக்கு மூலம் வழங்கப்பட்டது.

எனினும் விசாரணையை மேற்கொண்ட போது வீட்டின் சமையலறை பகுதியில் குழந்தை தூங்குவதற்கு சீலையினால் கட்டப்பட்ட தொட்டிலுக்கு அடியில் கவிழ்ந்து கிடந்த நிலையில் குப்பி லாம்பு ஒன்றையும் மீட்டுள்ளனர்.

காற்றினால் அசைந்த சீலைத் தொட்டிலில் குப்பி லாம்பின் தீ பரவியே தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கிறனர்.

குறித்த குழந்தையின் தந்தை வேலை நிமித்தம் வெளியூர் சென்றுள்ளதாகவும் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தையின் மீதான தீக்காயம் தொடர்பில் மேலதிக விசாரணையை தாயாரிடம் மேற்கொள்ள பொகவந்தலாரவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இரண்டு தலைப் பாம்பு இலங்கையில்



புத்தளம் மாவட்டம், சிலாபம் - பங்கதெனிய பிரதேசத்தில் இரண்டு தலையுள்ள பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாம்பு அந்தப் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரால் பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாம்பு ஆறு அடி நீளம் கொண்டது எனவும் யாராலும் இதுவரை பார்க்கப்படாத பாம்பு எனவும் பிடிக்கப்பட்டவரால் கூறப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களால் குறித்த பாம்பு ஆர்வமாகப் பார்க்கப்பட்டுள்ளதோடு புதுமையான பாம்பாக இருப்பதனால் தற்பொழுது தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மகிந்தவை தலைமைப் பொறுப்பில் அமர்த்தும் வரை போராட்டம் தொடரும்

### கூட்டு எதிரணி உறுதியான நிலைப்பாடு



இன்னும் சில நாட்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எஞ்சியிருக்கப்போவது கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், செயலாளர் துமிந்த திஸாநாயக்கவும் தான் என்று மகிந்த அணியான பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வீட்டில் கூலிக்கு இருந்தவர் வீட்டை சொந்தமாக்கிக் கொள்ளும் செயற்பாடே இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் நடந்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேறு அரசியல் சக்திகளுக்கு அடிபணிந்துள்ளது. இதற்கான முழுப் பொறுப்பையும் கட்சியின் தலைவரும், செயலாளருமே ஏற்கவேண்டும்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அதன் தலைமைத்துவம் மீது நம்பிக்கையில்லை. பாரிய அளவிலான உறுப்பினர்கள் கட்சியைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

கூடிய விரைவில் கட்சியின் தலைவரும், செயலாளரும் மாத்திரமே எஞ்சியிருப்பார்கள் என்று எமக்கு கண்கூடாகத் தெரிகிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பக்கமே மக்கள் உள்ளனர் என்பதை எவராலும் நிராகரிக்க முடியாது.

மக்களின் வாக்குகளில் தெரிவாகிய நாம் மக்களின் கருத்துகளுக்குச் செவிசாய்க்க வேண்டும். தேர்தலில் தோல்வியடைந்து தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டவர்கள் போன்று எங்களால் தலையாட்ட முடியாது.

மக்களின் விருப்பத்துக்கேற்ப மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் நாங்கள் தலைவராக்க வேண்டும். மகிந்த ராஜபக்ஷவை தலைமைத்துவத்தில் அமர்த்தும் வரை எங்கள் போராட்டத்தைகைவிடப் போவதில்லை என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




(கேலிச்சித்திரம்)

# கோர விபத்தில் இளைஞன் பலி!

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி களுதாவளையில் நேற்றுப் புதன் கிழமை காலை இடம்பெற்ற கோர வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளதாக களுவாஞ் சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞன் முன்னே சென்ற பிக்கப் ரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் எதிரே வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் மோதியதால் இவ்விபத்து சம்பவித்துள்ளது.



களுதாவளையைச் சேர்ந்த எம். இதயராஜ் (வயது 22) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்று மருத்துவப் பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# FCID அதிகாரிக்கு எதிராக நாமல் எம்.பி.முறைப்பாடு

(கொழும்பு)

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு அதிகாரி ஒருவர் தனக்கு எதிராக போலி முறைப்பாடு சமர்ப்பித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பொலிஸ்மா அதிபர்நிவாரண சேவை பிரிவில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி தனது சகோதரர் ரோஹித ராஜபக்ஷ நிதி மோசடி விசாரணை பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அன்றைய தினமும் தான் பொலிஸ் அதிகாரி ஒருவரை அச்சுறுத்தியதாக அந்த அதிகாரி போலி கருத்து வெளியிட்டதற்கு எதிராக நாமல் ராஜபக்ஷ முறைப்பாடு செய்துள்ளார்.

நாமல் தனது சட்டத்தரணி பிரேமநாத் சீ.தொலவத்தையுடன் பொலிஸ் தலைமையகத்திற்கு சென்று இவ்வாறு குறித்த அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். (இ-7)

# வெளிவிவகார அமைச்சர் மாரப்பனவுடன் இந்தியத்தூதுவர் தரண்ஜித் சிங் சந்திப்பு

(கொழும்பு)

புதிய வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை இலங்கைக்கான இந்திய தூதுவர் தரண்ஜித் சிங் சந்து நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் இடம் பெற்றுள்ளது. இலங்கையின்



புதிய வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற திலக் மாரப்பனவை, இந்திய உயர்ஸ்தானிகர் முதல முறையாக சந்தித்துள்ளார்.

இதன்போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. (இ-7)

# மகிந்தவின் ஆலோசகர் பதவி குறித்து மத்திய குழுக் கூட்டத்தில் ஆலோசனை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் பதவி குறித்து, கட்சியின் அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதாக அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் தாமே என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தெரிவாவார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சித் தலைமை பதவியை நிறைவேற்று ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்கு அப்போது கட்சியின் மத்திய குழுவில் தாமும் கையுயர்த்தியதாக அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா சுட்டிக் காட்டியுள்ளார். இவை மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றாக தெரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அவர் கட்சியின் ஆலோசகராக பதவியேற்று கட்சியின் மாநாட்டில் பங்கேற்றிருந்தார். இந்த நிலையில், தற்போது அவரின் ஆலோசகர் பதவி குறித்த கேள்வியொன்று எழுகிறது.

எனவே, அது தொடர்பாக கட்சியின் அடுத்த மத்திய குழு கூட்டத்தில் ஆராய வேண்டும் என அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா கூறியுள்ளார். (இ-7)

## பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக நீதிமன்றில் மனு



பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றினை அவமதித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் ரஞ்சன் ராமநாயக்க தண்டிக்கப்பட வேண்டுமெனக் கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பிலானமனுவை மாகல்கந்தே சுதந்த தேரர் மற்றும் இரண்டு பேர் தாக்கல் செய்துள்ளனர். (இ-7)

# மலைத்தொடரில் தீ



(கொழும்பு)

வெலிமடை பிரதேச செயலகத்திற்குட்பட்ட போகஹகும்புர கோணகொல்ல மலைத்தொடரில் நேற்று முன்தினம் ஏற்பட்ட காட்டுத்தீ காரணமாக சுமார் 25 ஏக்கர்கள் அரச வனப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளதாக வெலிமடை இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பிரதேசத்தில் நிலவுகின்ற வரட்சி மற்றும் கடும் காற்று காரணமாக தீயை கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. (இ-7)

# புத்தசாசன அமைச்சு ரவீந்திர சமரவீரவுக்கு?

(கொழும்பு)

நீதி அமைச்சுப் பதவியை தற்பொழுது வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி அமைச்சராகவுள்ள தலதா அத்துகோரளவுக்கு வழங்குவதாக செய்திகள் வெளியாகியிருந்த போதிலும், அது தொடர்பில் உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள் எதுவும் அமைச்சர் தலதா அத்துகோரள வுக்கு அறிவிக்கப்படவில்லை யென தெரியவருகின்றது.



இதேவேளை, புத்தசாசன அமைச்சுப் பதவி, ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும், தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீரவுக்கு வழங்கவுள்ளதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளன. (இ-7)

# எந்தக் கொடுக்கல் வாங்கலும் விஜயதாஸவுடன் இல்லை

## மகிந்த ராஜபக்ஷ நிராகரிப்பு

தமக்கும் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கும் இடையில் எந்த வித கொடுக்கல் வாங்கல்களும் இல்லை என முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதன்போது, விஜயதாஸ ராஜபக்ஷ, மகிந்த தரப்பினருடன் கொடுக்கல்-வாங்கல்களில் ஈடுபட்டிருப்பதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இடையிலும் கொடுக்கல் வாங்கல் இருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது, எனினும் இரு குற்றச்சாட்டுக்களும் உண்மைக்கு புறம்பானது என தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வழக்கு விசாரணைகள் முடிவின்றித் தொடர்வதால்

# அரசியல் கைதிகளின் உளநலம் பாதிப்பு!

## த.தே.ம.முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் கவலை

(யாழ்ப்பாணம்)


**அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் முடிவின்றி தொடர்வதால் அரசியல் கைதிகளின் உளநலம் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இதன் போர்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக சிறைச்சாலையில் இருக்கின்ற அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் நீதி விசாரணை இன்றி உள்ளார்கள். அநுராதபுரம் சிறைச்சாலையில் இன்று (நேற்று) 4 ஆவது நாளாகவும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர். இதனால் அந்த கைதிகளின் உடல் நிலை மிகவும் மோசமாகி வருகின்றது.

உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற அரசியல் கைதிகளில் 3 பேருடைய உடல் நிலை மோசமடைந்துள்ளது. அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிராக 2013 ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குகள் அனைத்துமே கைதிகளிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ளன. இந்த வழக்கு நடைபெறும் காலப் பகுதிகளில் மன்றில் சட்டமா அதிபரை பிரதிபலிக்கும் அரச சட்டத்தரணிகள் வழக்கை கொண்டு நடத்த காலஅவகாசம் கோரி வருகின்றனர்.



இதனால்கைதிகள் அனைவரும் தங்களுக்கு என்ன நடைபெறும் என்று தெரியாமல் மிக மோசமாக உள சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போது அரசியல் கைதிகள் மீது ஏற்கனவே இருந்த குற்றப் பத்திரிகை திருத்தப்பட்டு வழக்கில் சிலர் சேர்த்து கொண்டுள்ளனர். இந்த வழக்கை அவர்களின் நீதிமன்ற எல்லையை விடுத்து கொழும்பு அல்லது வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முயன்று வருகின்றது.

வெளி மாவட்டங்களுக்கு வழக்கை மாற்றினால் அப்பாவி உறவினர்களுக்கு மொழி தெரியாது. இடம் தெரியாத நிலையில், இதனால் அவர்களின் கைதிகளின் உடல் நிலையையும் கவனிக்க முடியாது. எனவே இந்த வழக்குகள் சிங்கள பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்பட முடியாது. வவுனியாவில் நடைபெற வேண்டும் அல்லது விடுவிக்கப்பட வேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களம் அப்பாவி இளைஞர்களின் வழக்கு விசாரணைகளை வேறு இடங்களுக்கு திட்டமிட்டு மாற்றுவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. கண்டிக்கத்தக்கது. அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு தார்மீக நியாயம் உண்டு. அவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு தான் தங்கள் நியாயத்தை கூறுகின்றார்கள். ஆகவே அரசியல் கைதிகள் அனைவரும் எந்த நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட வேண்டும்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த சிறைச்சாலைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் அநுராதபுரத்தில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் தீர்வை பெற் றுக்கொடுப்பதற்கு தனக்கு அதிகாரம் இல்லை. ஆகவே தன்னால் ஒன்றும் செய்ய முடியாது.

நீதி அமைச்சரே நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறிச் சென்றுள்ளார். அமைச்சர்கள் தமிழராக இருந்தாலும் அரச சார்பிலேயே எப்போதும் இருப்பார்கள். அவர்கள் இவ்வாறு பேசுவது ஆச்சரியமல்ல. மேலும் அரசிற்கு நிபந் தனை இன்றிய ஆதரவை வழங்கி விட்டு, தற்போது உலக நாடுகளை தலையிடுமாறு கோருவது என்பது மக்களை முட்டாளாக்கும் தேர்தல் அரசியலுக்கான நாடகமே. இதனை மக்கள் சரிவர புரிந்து கொள்ள வேண்டும் என கஜேந்திரன் மேலும் தெரிவித்தார். (இ-4)

---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1170

Search for people, places and things | Nagendram | Home

**சினேகா**

உங்க மனைவிய செல்லமா எப்படி கூப்பிடுவீங்க..., கூகிள்னு...., ஏன்?




நான் எப்ப எங்க இருந்தாலும் கண்டுபுடிச்சிடுவா...

**ஜானு**


தமிழ் டப் ஹிந்தி சீரியல்ல நாம தெரிஞ்சுக்கிட்டது...




1. பணக்காரனா இருப்பாய்ங்க.
2. டெய்லி பூஜை பண்ணுவாங்க.
3. வாரம் ஒரு கல்யாணம் வீட்ல நடக்கும்.
4. வீட்ல ஆம்பிளைங்க,வேலைக்கு போகமாட்டாங்க..

**பிரியா**

நாடி நரம்பெல்லாம் போட்டோகிராபிக் வெறி ஊறுன ஒருத்தனாலதான் இப்புடிலாம் போஸ் குடுக்க முடியும்...



**நிஷாந்**

இன்னிக்கு யார் என் பேச்சைக்கேட்டு ஒழுங்கா இருக்காங்களோ, அவங்களுக்கு ஒரு பரிசு தருவேன்!




போம்மா... இந்த விளையாட்டுக்கு நான் வரலை, எப்பவும் அப்பாதான் ஜெயிப்பாரு...!

**சங்கரன்**

தவறாக இருக்கும் பொழுது வாயை மூடிக்கொண்டு இருந்தால், நீ புத்திசாலி...




அதுவே சரியாக இருந்தும் வாய்யை மூடிக்கொண்டு இருந்தால், நீ புருஷன்...

**சங்கவி**

பேராசைக்கு சிறந்த உதாரணம்னா, விருப்பப்பட்ட எல்லாத்தையும் சாப்பிட்டு...




உடம்பும் வெயிட் போடக்கூடாதுனு நினைக்கிறது தான்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## தப்பித்த ஆரவ்



ஓவியா ரசிகர்கள் ஆரவ்வை எப்போது வெளியேற்றலாம் என காத்துக்கொண்டிருக்கும் நிலையில், அவர் இந்த வாரம் எலிமினேஷன் லிஸ்டில் சேர்ந்து சிறிது நேரத்தில் தப்பித்துவிட்டார்.

வீட்டின் நடுவில் ஒரு பஸ்ஸர் வைக்கப்பட்டு இருந்தது. அதை ஆரவ் தெரியாமல்அழுத்திவிட்டார். அதனால் அவர் எலிமினேஷன் லிஸ்டில் சேர்க்கப்பட்டார்.

ஆனால் வேறு மூன்று பேருக்கு போட்டி வைத்து அவர் தப்பித்துக்கொள்ளலாம் என பரிகாரம் கொடுக்கப்பட்டது.

நீச்சல் குளத்தில் நடந்த போட்டியில் சுஜா வருணி தோற்றதால் அவர் ஆரவ்வுக்கு பதிலாக எலிமினேஷன் லிஸ்டில் சேர்க்கப்பட்டார்.

## கொடுமை டாஸ்க்



பிக்போஸ் வீட்டில் தினம்தோறும் கொடுக்கப்படும் டாஸ்க் போட்டியாளர்களுக்கு எப்போதும்தலைவலியை கொடுப்பது வழக்கமாகிவிட்டது.

சுஜா வருணி மற்றும் சிநேகன் ஆகியோர் இரவு முழுவதும் ஒரு கூடை பந்தை மாற்றி மாற்றி எறிந்து கொண்டிருக்கவேண்டும் என டாஸ்க் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்படி ஒரு டாஸ்க் கொடுத்ததால் பிக்போஸ் வீட்டில் இருப்பவர்கள் மிகவும் கடுப்பில் காணப்பட்டனர்.

## ஜூலிக்கு திருமணம்



ஜல்லிக்கட்டு போராட்டத்தில் கலந்து கொண்டபோது ஜூலி போன்ற ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று இளைஞர்கள் முடிவெடுத்தனர்.

பிக்போஸில் கலந்து கொண்ட பிறகு ஜூலியின் நிலைமையே தலைகீழாக மாறி விட்டது. பிக்போஸில் இருந்து வெளியே வந்த ஜூலி தன்னை பற்றி சமூக வலைத் தளங்களில் வந்த செய்திகளை பார்த்து மிகவும் நொந்து போய் விட்டார்.

என்னால்தான் உங்களுக்கு இந்த அவமானம்.நான் எங்காவது சென்று விடுகிறேன் என பெற்றோரிடம் கூறி உள்ளார். இதனால் அவரது பெற்றோர் மிகவும் வேதனை அடைந்து விட்டனர்.

எனவே ஜூலிக்கு ஒரு திருமணம் செய்து வைத்தால் எல்லாம் சரியாகி விடும் என்று கருதி உள்ளனர். இதற்காக மாப்பிள்ளை பார்க்கும் படலத்தை தொடங்கி உள்ளனர். வெளியில் இருந்து யாரும் ஜூலியை திருமணம் செய்ய முன் வரவில்லை.

எனவே சொந்தத்தில் மாப்பிள்ளையை தேட தொடங்கி உள்ளனர். அவர்களும் ஏகப்பட்ட வரதட்சணை கேட்கிறார்களாம். அதுமட்டும் அல்லாமல் பிக்போஸில் ஜூலி வாங்கிய தொகையை அப்படியே தந்து விட வேண்டும் என்கிறார்களாம்.

மேலும் திருமணத்தை மண்டபத்தில் வைக்கக்கூடாது. எளிமையாக கோயிலில்தான் நடத்த வேண்டும் என்கிறார்களாம். இருந்தாலும் தொடர்ந்து நல்ல மாப்பிள்ளையை தேடும் படலம் நடந்து வருவதாக கூறப்படுகிறது.

## ஜூலியின் வேலை

சமீபத்தில் பிக்போஸ் நிகழ்ச்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜூலி, சென்னை நுங்கம்பாக்கத்தில் செயற்பட்டு வரும் தனியார் தொலைக்காட்சியொன்றில் வேலைக்கு சேர்ந்துள்ளதாக தெரிகிறது.

நிகழ்ச்சி தொகுப்பாளர் பணிக்கு சேர்ந்துள்ள ஜூலி, நிகழ்ச்சியிலிருந்து வெளியேறிய சக்தி மற்றும் ஜூலியை விமர்சிக்க வேண்டாமென வீடியோ பதிவு ஒன்றினை வெளியிட்ட ஓவியாவுக்கு, சக்தி மற்றும் ஜூலி இருவரும் இணைந்து நேரில் சென்று சந்தித்து நன்றி தெரிவிக்க உள்ளதாகவும் தெரிகிறது.

## முட்டைப்பிரச்சினை




BiggBoss நிகழ்ச்சி குறித்த பரபரப்பு இப்போதும் ரசிகர்களிடம் அதிகமாக உள்ளது. நிகழ்ச்சி ஆரம்பத்தில் இருந்து விதியை மீறி நடப்பவர் ரைசா. இரவு நேரத்தை தவிர மற்ற நேரங்களில் தூங்கக்கூடாது என்பதை அறிந்தும் நிறைய நாட்கள் ரைசா தூங்கியிருக்கிறார்.

இதனால் பலமுறை BiggBoss அவரை கண்டித்துள்ளார். தொடர்ந்து ரைசா இப்படியே செய்து வருவதால் அண்மையில் BiggBoss அதிரடி முடிவு எடுத்துள்ளார்.

புது நபர் ஒருவர் முகமூடி அணிந்து வந்து வீட்டில் இருந்து முட்டைகளை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். இறுதியில், ரைசா தன்னை மாற்றிக்கொள்ள முடிவு எடுப்பாரா என்பது பொறுந்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## ஓவியா புராணம்



தற்போது பிக்போஸ் நிகழ்ச்சியில் உள்ள அனைவரும் ஓவியாவை மனதில் வைத்துத்தான் நடந்து கொள்கிறார்கள். ஏனெனில் ஓவியாவிற்கு தான் மக்கள் ஆதரவு அதிகம்.


தற்போது பிக்போஸ் வீட்டில் இருந்து பல பிரபலங்கள் வெளியேறிய நிலையில் 3 புதிய பிரபலங்களை நிகழ்ச்சிக்குள் கொண்டு வந்துள்ளனர். மக்களிடம் ஓவியாவிற்கு ஆதரவு இருப்பதால் வீட்டில் உள்ள புது பிரபலங்கள் ஓவியா பெயரை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள்.

காஜல், ஹரிஷ் கல்யாணிடம் ஓவியாவிற்கு நாம் ஆதரவாக பேசி பழகிக் கொண்டால் நம்மால் இந்த வீட்டில் கடைசி வரை இருக்க முடியும் என்றார். இதே போல் தான் இந்த நிகழ்ச்சியில் உள்ள சுஜாவும் அடிக்கடி ஓவியாவை பற்றி பேசுவார். சில நேரங்களில் ஓவியா போல் நடந்துகொள்ள முயற்சி செய்வார். இதை சிநேகன் ஒரு முறை சுட்டிக்காட்டி உள்ளார்.

இதைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்களில் "Oviya come soon" என்று சுஜா வீட்டின் வராண்டாவில் கோலம் போட்டிருந்தது போல் ஒரு புகைப்படம் பரவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த அணி வகுப்பு நிகழ்வு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆ.பி.ஏ. பியந்த தலைமையில் நேற்று நடைபெற்றது.(படங்கள்:-மகாலிங்கம்)

# அதிசொகுசு வாகனம் மின்கம்பத்தில் மோதி விபத்து

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் அதி சொகுசு வாகனம் ஒன்று பாரிய விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பில் இருந்து காத்தான்குடி நோக்கி வந்த சொகுசு வாகனம் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.




இந்தச் சம்பவத்தினால் பி[illegible]ான மின்சார கம்பம் பாரிய சேதமடைந்துள்ளதுடன் வாகனமும் கடுமையான சேதங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், யாருக்கும் உயிர் ஆபத்து இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. படுகாயமடைந்தவர்களில் இரண்டு பெண்களும் இரண்டு சிறுவர்களும் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து காரணமாக மட்டக்களப்பு மற்றும் ஏறாவூர் பகுதிக்கான மின்சாரம் மாற்று வழியில் வழங்கப்பட்டுள்ளதுடன் சத்துருக்கொண்டான், மைலம்பாவெளி, பிள்ளையாரடி உட்பட சில பகுதிகளுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தொல்லியல் பெறுமதிமிக்க இடிதாங்கியுடன் 4 பேர் கைது

சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியான தொல்லியல் பெறுமதிமிக்க இடி தாங்கியை விற்பனை செய்ய முயற்சித்த 4 பேரை கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

களுத்துறை, தொடங்கொட மற்றும் நேபட பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இடி தாங்கியின் வெண்கல உலோகத்தை டிப்பர் வாகனம் ஒன்றில் எடுத்துச் சென்று கொண்டிருந்த போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு கிடைத்த புலனாய்வு தகவல் ஒன்றை அடுத்து மேற்கு பிராந்திய கடற்படை கட்டளை தலைமையகத்தின் கடற்படையினரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இடி தாங்கியுடன் சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர். (இ-7)

# சுயபொருளாதாரத்தில் பனையின் பங்கு

இந்துமா சமுத்திரத்தின் முத்தென வர்ணிக்கப்படும் இலங்கைத் திருநாடானது செழிப்பும், வனப்பும் மிக்க சோலையாக இருக்கின்றதுடன், வளம் பொருந்திய இடமாகவும் தென்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு வாழ்கின்ற மக்கள் நெற்செய்கையை ஜீவ[illegible]ாபாயத் தொழிலாகவும், வாழை, தென்னை, கமுகு, மா,பலா,மரக்கறிப் பயிர்களையும் பயிரிட்டு வாழ்ந்து வருகின்றனர். அவற்றில் சிறந்த பயன்தரு கற்பக தருவான பனைமரத்தை அவர்கள் தம் கடவுளாக எண்ணி நேசிக்கின்றனர். ஏனெனில் சுயபொருளாதாரத்தில் முக்கிய இடம் வகித்து மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அதுவே. ஆனால் காலத்தின் கோலத்தால் கடந்த காலப் பகுதியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தினாலும் இடப்பெயர்வாலும் மக்கள் பேரழிவைச் சந்தித்தனர். அதன்பால் மரங்களும், பல்வேறு நிரந்தரப் பயிர்களும் அழிவடைந்தன.

ஒட்டுமொத்தமாக காலநிலை மாற்றத்தின் விளைவாக காடுகள் அழிவடைவதுடன் வரட்சி ஏற்படுகிறது. மண்ணரிப்பு ஏற்பட்டு மண்வளம் அற்றுப்போதல், வெள்ளப்பெருக்கு அபாயம், உயிரின் அழிவு போன்ற பாதிப்புக்கள் உருவாகின்றன. இதில் காடுகள் என்று குறிப்பிடப்படும்போது 3/4 பங்கு பனை மரங்களே அடங்குகின்றன. பனைமரம் பாதிப்புக்களைக் குறைக்கவல்ல ஆயுதம். தற்போது இலங்கையில் மக்களின் வாழ்விடங்களில் காலநிலைச் சீர்கேட்டினால் மோசமாக மரங்கள் அழிவடைந்துள்ள பகுதிகளில் அதாவது ஆறு, குளம், கிணறு போன்ற நீர்நிலைகளில் நீர்மட்டம் நன்கு குறைந்து மிக அரிதாக நீர் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இருந்தும் மக்கள் அழிந்து போன நீண்டகால மரங்களையும் நாட்டி பசுமைப் புரட்சிக்கு வழிகோலுதல் அவசியமாகும். இதில் பனைமரம் எனும் கற்பகதரு அவசியமானது.



"நாட்டிடுவோம் பனைமரக் கன்று கொட்டட்டும் மழை இங்கு"

ஏனெனில், இது சுய பொருளாதாரத்திற்கு அதிக பங்கு வகிக்கின்றது. மக்கள் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றி சுயபொருளாதாரத்தை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டுமெனில் சூழல் சமநிலையைப் பேணும் பனையை நாட்டி பசுமை நிலையை ஏற்படுத்துவதே சிறந்த வழியாகும்.

இதனால் நாட்டில் உணவில் தன்னிறைவு பெறுவதுடன் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்யும் சுயதொழில் வாய்ப்பும் கிடைக்கப்பெறும். பனையின் பகுதிகளான ஓலை, காய், கனி, வித்து எனப் பலபாகங்களையும் உணவுப் பண்டங்கள் செய்யவும் பயன்படுத்த முடியும்.

பயிர் மீதங்கள் கால்நடை உணவாகப் பயன்படுகின்றன. சிலவகைபகுதிகள் மருந்து மூலிகையாகப் பயன்படுகின்றன. பலமரங்கள் வெட்டுமரத் தேவைக்கும், தளபாடம் செய்வதற்கும் மற்றும் விறகுப் பாவனைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. பனைமரங்கள் மண்ணரிப்பைத் தடுத்து மண்வளம் பேணும் பணியுடன் காலநிலையில் பாதிப்பு ஏற்படாவண்ணம் மக்கள் வாழும் சூழலைப் பாதுகாத்து உயிர்ச் சமநிலையை பேணி நிற்பதுடன் மழைநீரைப் பொழிவிக்கின்றன.

எனவே பனை மரங்களுக்கு மேலதிகமாக நாம் புதிய மரங்களையும், பயிர்களையும் நாட்டிக் கொள்ளல் அவசியம். நாளுக்குநாள் சூழலில் ஏற்படும் உயர் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளவும், பச்சைவீட்டு விளைவின் தாக்கத்தின் அளவைக் குறைத்துக் கொள்ளவும், சூழலை வனப்புமிக்க தாக்குவதற்கும் அழிக்கப்பட்ட மரங்களுக்கு ஈடுகொடுக்கும் வண்ணமும், நாம் எதிர்கால சந்ததியினருக்கு பொருத்தமான சூழலை அமைத்துக் கொடுக்கவும் காலநிலைக் காரணிகளில் பாதிப்பு ஏற்படாமலும் போதிய மழைநீரைப் பெற்று நம்மவர்கள் சுகதேகிகளாக வாழப் பல்வேறுபட்ட பயன்தரும் மரங்களை நாட்டிப் பயன்பெறச் செய்தல் பயன்மிக்க செயற்பாடாகும்.

பனையின் விளைபொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு ஜாம், பழப்பாகு போன்றவற்றைக் கூட தயாரிக்கலாம் என ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் பானங்கள் தயாரிக்கும் நிலையங்களை உருவாக்கிக் கொள்வதுடன் விவசாயம்சார் குடிசைக் கைத்தொழிலாக ஒடியலிட்டு பொதிசெய்து விற்றல், ஒடியற்கூழ் காய்ச்சிவிற்றல், பனாட்டு பலகாரங்கள், உணவு வகைகள் போன்றவற்றை பொதி செய்து விற்பனை செய்யும் தொழிலகங்களை உருவாக்கலாம்.

பனையின் பயன்களில் சில குறிப்பிட்ட போகங்களில் கிடைப்பதனால் விளை பொருட்களைப் பதப்படுத்தி சேமித்து வைத்து தட்டுப்பாடான காலங்களில் நுகர்வோருக்கு ஏற்ற வகையில் சந்தைப்படுத்தி சந்தை வாய்ப்பை பெறுவதன் மூலம் பலர் சுய பொருளாதாரத்தை மேம்படுத்தி குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

குறிப்பாக விதவைகள், குடும்பத் தலைவராகவுள்ள பெண்கள் உள்ள குடும்பங்கள் கூட தம்வாழ்க்கையை சுலபமாக நகர்த்திச் செல்ல முடியும். வாழ்விடங்களில் மக்கள் அதிகளவு பனைமரங்களை உருவாக்கி விவசாயம் சார்ந்த கைத் தொழில் சாலைகளை அமைக்க மனம் தளராது பாடுபடுவார்களாயின் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதுடன் சிறந்த பயன்மிக்க பொழுது போக்காகவும் பலருக்கு அமையும்.

இச் செயற்பாடானது பல துன்பங்களைக் கண்டு துவண்ட உள்ளங்களுக்கு மகிழ்வையும் உடல் ஆரோக்கியத்தையும், புத்துணர்வையும் ஊட்டிக்கொடுக்கும். எதிர்கால சந்ததியினருக்கு வாழ்வின் அத்திபாரமாகவும், பனைமரங்களின் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு விதைகளையும், மரக்கன்றுகளையும் வழங்குதல், நடுகைக்குப் பின்னரான பிற்கவனிப்பு வேலைகளுக்கு மானியங்கள் வழங்குதல், விவசாய உள்ளீடுகளை வழங்குதல், உற்பத்தியாளர்களின் வெளியீடுகளை விற்பனை செய்ய சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

மேலும் இளைஞர்களிடம் பனைமரச் செய்கைகளுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள், பரிசுமுறைகள், போட்டிகள் போன்றவற்றையும் நடைமுறைப்படுத்த லாம்.

இவற்றுடன் விசேட பனஞ் செய்கை முறையை மேற்கொள்ள முறைசாராக் கல்வி மூலம் இளைஞர், யுவதிகளுக்குப் பயிற்சியளித்தல், வகுப்புக்கள் நடத்துதல், செயலமர்வுகள், வதிவிடப் பயிற்சி போன்றன மூலம் சுயபொருளாதாரத்தை மேம்படுத்தி உற்பத்தியை உயர் அளவிற்கு உயர்த்தத் திட்டமிடலாம்.

பா.சுதாகரன், பொது முகாமையாளர்
பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றி மறந்த சிங்கம்

முல்லை மலர் என்ற காட்டில் விறகு வெட்டு வதற்காக சென்று கொண்டிருந்தான் மனிதன் ஒருவன்.

அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. பயத்துடன் ஓடத் தொடங்கினான் மனிதன்.

"மனிதனே பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்"என்ற குரல் கேட்டது.

தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான் மனிதன்.

அங்கு ஒரு கூண்டில் சிங்கம் அடைபட்டு இருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.

மனிதனைப் பார்த்த சிங்கம், "மனிதனே, என்னை இந்த கூண்டிலிருந்து விடுவித்து விடு. .. நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்."என்றது.

"நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்?" என்றான் மனிதன்.

"மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்களுக்கு உண்டு தான். அதற்காக உயிர்காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்றுவிடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூண்டின் கதவைத்திற. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்"என்று தந்திரமாகப் பேசியது சிங்கம்.

சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! நன்றி கெட்ட சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாராயிற்று.

இதனைக் கண்ட மனிதன், "சிங்கமே, நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்தேனே... அதற்கு இது தானா நீ காட்டும் நன்றி" என்றான்.

"என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்று தானே பொருள். அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறிய வேண்டாமா? முட்டாள் தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றது சிங்கம்.


"கடவுள் உன்னை தண்டிப்பார். உன் உயிரை காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமா? உன்னை விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல"என்றான் மனிதன்.

அப்போது அவ்வழியாக ஒரு நரி வந்தது.

"இதனிடம் நியாயம் கேட்போம்"என்று கூறிய மனிதன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.

"எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான். முட்டாள்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும். நீ என்ன சொல்கிறாய் நரியாரே..."என்றது.

அனைத்தையும் கேட்ட நரிக்கு சிங்கத்தின் நன்றி கெட்ட



செயல் புரிந்து விட்டது. உதவி செய்த மனிதனைக் காப்பற்றி சிங்கத்தை கூட்டில் பூட்டிவிட தந்திரமாக செயல்பட்டது. அதனால் ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்து.

"நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்" என்றது நரி.

உடனே சிங்கம் சொல்லத் தொடங்கியது.

"நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்..."

"எந்தக் கூண்டிற்குள்?"என்றது நரி.

"அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்"என்றது சிங்கம்.

"எப்படி அடைந்து கிடந்தீர்கள்?"என்றது நரி.

சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடியது.

"நரியாரே! இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்து விட்டீரே!"என்று கத்தியது சிங்கம்.

"நீங்கள் பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த மனிதனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் மனிதனை அடித்துக் கொல்வீர்கள். பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால் தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டி விட்டேன்"என்றது நரி.

நன்றி மறந்த சிங்கம் தான் செய்த தவறை எண்ணி வருந்தியது.

நீதி: ஒருவர் செய்த உதவியை எப்போதும் மறக்க கூடாது.




- 1349 -ஜேர்மனியின் மாயின்ஸ் நகரில் 6.000 யூதர்கள் கொல்லப்பட்டனர்.
- 1511 - மலாக்காவை போர்த்துக்கல் மன்னன் அல்பொன்சோ டி அல்புகேர்க் கைப்பற்றினான்.
- 1572 - புனித பார்த்தெலோமேயு தினப் படுகொலை: பிரான்சின் 9ம் சார்ல்சின் கட்டளைக்கேற்ப பிரெஞ்சுப் புரொட்டெஸ்தாந்தர்கள் படுகொலைப் படலம் ஆரம்பமாயிற்று.
- 1690 - கல்கத்தா நகரம் அமைக்கப்பட்டது.
- 1814 - பிரித்தானியப் படையினர் வோஷிங்டன். டி.சி.யை முற்றுகையிட்டு வெள்ளை மாளிகை உட்படப் பல கட்டடங்களுக்குத் தீ வைத்தனர்.
- 1821 - மெக்சிகோவின் ஸ்பெயினுடனான விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- 1875 - கப்டன் மத்தியூ வெப் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதலாவது மனிதர் ஆனார்.
- 1912 - அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1929 - பாலஸ்தீனத்தில் நிகழ்ந்த கலவரங்களில் நூறுக்கும் மேற்பட்ட யூதர்கள் கொல்லப்பட்டனர்.
- 1931 - பிரான்சும் சோவியத் ஒன்றியமும் தமக்கிடையே போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.
- 1936 - ஆஸ்திரேலிய அண்டார்க்டிக் பிரதேசம் உருவாக்கப்பட்டது.
- 1939 - நாசி-சோவியத் உடன்பாடு ஹிட்லருக்கும் ஜோசப் ஸ்டாலினுக்கும் இடையில் எட்டப்பட்டது.
- 1949 - நேட்டோ ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.
- 1954 - அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.
- 1954 - பிறேசில் அதிபர் கெட்டூலியோ வார்காஸ் தற்கொலை செய்து கொண்டார்.
- 1968 - பிரான்ஸ் தனது முதலாவது ஐதரசன் குண்டை வெடிக்க வைத்தது.
- 1989 - வொயேஜர் 2 நெப்டியூனைத் தாண்டியது.
- 1991 - சோவியத் ஒன்றியத்திலிருந்து உக்ரேன் பிரிந்தது.
- 1992 - மக்கள் சீனக் குடியரசுக்கும் தென் கொரியாவுக்கும் இடையில் தூதரக உறவுகள் ஏற்படுத்தப்பட்டன.
- 1995 - விண்டோஸ் 95 வெளியிடப்பட்டது.
- 2006 - ஐக்கிய நாடுகளின் ஓர் அமைப்பான UNOPS அலுவலர் ஒருவர் அம்பாறை திருக்கோவில் பகுதியில் அலுவலகத்திற்கு அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். சங்கதி
- 2008 - சீனாவில் 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டிகள் முடிவடைந்தன.

பிறப்புகள்

- 1947 - பவுலோ கோய்லோ, பிரேசில் எழுத்தாளர்
- 1963 - தா. பாலகணேசன், ஈழத்து எழுத்தாளர்
- 1981 - சாத் மைக்கேல் முர்ரே, அமெரிக்க நடிகர்
- 1988 - ரூபர்ட் கிரின்ட், ஆங்கிலேய நடிகர்

இறப்புகள்

- 1995 - சுந்தரம் கரிவரதன், இந்தியாவின் தானுந்து விளையாட்டு வீரர் (பி. 1954)

சிறப்பு நாள்

- புனித பர்த்தலமேயு நாள்
- விடு[illegible] நாள் ([illegible], 1991)
- கோ[illegible] நாள் ([illegible] போர்னியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 120 | 140 | 140 | 140 | 170 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 240 | 300 | 300 | 300 |
| தக்காளி | 160 | 200 | 120 | 120 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 60 | 70 | 80 | 160 | 80 |
| கோவா | 100 | 120 | 80 | 120 | 100 | 100 | 120 |
| கரட் | 100 | 250 | 140 | 100-240 | 200 | 160 | 160 |
| பூசணி | 60 | 50 | 40 | 40 | 50 | 50 | 60 |
| புடோல் | 50 | 120 | 50 | 50 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 140 | 160 | 200 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 120 | 130 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 200 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 50 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 100 | 100 | 140 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 100 | 60 | 40 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 120 | 100 | 120 | 60 |
| பீற்றூட் | 40 | 50 | 40 | 40 | 60 | 60 | 70 |
| கறிமிளகாய் | 120 | 150 | 100 | 120 | 140 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 80 | 20 | 40 | 100 | 50 | 40 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 100 | 160 | 200 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 80 | 120 | 120 | 120 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 40 | 30 | 30 | 35 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 100 | 140 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 70 | 65 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | - | 300 | - | - | - |
| வெங்காயப்பூ | 180 | 200 | 150 | 140 | 140 | 200 | 150 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 60 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 100 | 60 | 60 | 100 |

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு.
~ பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இணைந்த சேவை மூலம் மக்களுக்கு உயர் பணி ஆற்றுங்கள்

வட மாகாணத்தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் செயற்படாமல் – இயங்காமல் செய்வதில் ஒரு குறிப்பிட்ட மாகாண சபை உறுப்பினர்கள் தீவிரமாக உள்ளனர்.

இந்த நிலைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. வடக்கு மாகாண சபை பதவி ஏற்ற காலத்தில் இருந்தே முதலமைச்சருக்கான தொந்தரவு திட்டமிட்டபடி செய்யப்பட்டு வருகிறது.

அதில் ஒன்றுதான் அமைச்சர்களுக்கு எதிராக விசாரணை நடத்தவேண்டும்; அமைச்சர்களை நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் தீர்மானங்களுமாகும்.

அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை கொண்டு வந்தவர்கள் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் என்பதை சிலர் மறந்து பேசுவதுதான் விசித்திரமாக உள்ளது.

ஆனால் இது விடயங்களில் தமிழ் மக்கள் மிகவும் நிதானமாக இருக்கின்றனர். தவிர, முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படும் வகையில் வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவரை உசுப்பேத்தி விடுகின்ற விடயங்களும் தாராளமாக நடக்கின்றன.

முதலமைச்சருக்கு எதிராகக் கதைப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவருக்கு எவ்வளவு நேரமும் ஒதுக்கிக் கொடுக்கின்ற செயற்பாடுகளை மக்கள் நிதானமாக அவதானித்து வருகின்றனர்.

இதற்கு மேலாக எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நின்று ஆளுங்கட்சி சார்ந்த எவரையும் தாக்காமல் தனித்து முதலமைச்சரை மட்டுமே விமர்சிப்பதையும் அவதானிக்க முடிகிறது.

என்ன செய்வது நுணலும் தன்வாயால் கெடும் என்பது இங்கும் பொருந்துகிறது.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரின் கடந்த கால உரைகள் மீது மக்கள் கவனம் செலுத்தினராயினும், என்று அவர் ஒரு பக்கம் சார்ந்து; தமிழரசுக் கட்சியின் ஒரு தரப்புடன் ஒப்பந்தம் செய்தது போல முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் திட்டமிட்டுப் பேச விழைந்தாரோ அன்று மக்கள் நிலைமையைப் புரிந்து கொண்டனர்.

எது எவ்வாறாயினும் வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் ஒன்றுசேர்ந்து தமிழ் மக்களுக்கு பணியாற்ற வேண்டும்

இந்த ஒற்றுமைப்படுத்தலை எதிர்க்கட்சித் தலைவர் செய்ய முற்பட்டிருந்தால், அதனை மக்கள் மேலான செயலாக மதித்திருப்பர்.

இது ஒருபுறம் இருக்க, தமிழர் தாயகத்தில் உள்ள அரச திணைக்களங்கள், நிறுவனங்கள், கூட்டுஸ்தாபனங்கள் ஒன்றுசேர்ந்து மக்களுக்கு உன்னதமான பணியை ஆற்ற முன்வர வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபையும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையும் இணைந்து பணி செய்வதன் மூலம் மக்கள் மிக உயர்ந்த சேவையைப் பெறமுடியும்.

இருந்தும் இரண்டு அமைப்புக்களும் முரண்பட்டு நிற்பது போலத் தெரிகிறது. இந்த முரண்பாடு யாரில் உள்ளது என்று மக்கள் கவனத்தில் கொள்ளமாட்டார்கள். மாறாக இரண்டு தரப்பும் தங்கள் சொந்த நிர்வாகம் நடத்துவது போல நடந்து கொள்கின்றனர் என்றே கருதுவர்.

ஆகையால் வடக்கு மாகாண சபையில் உறுப்புரிமை கிடைத்த சிலரின் நடவடிக்கை அவர்களின் எதிர்காலத்தையே சின்னாபின்னப்படுத்துவது போல, இந்த இரண்டு அமைப்புகளும் நடந்து கொள்ளக்கூடாது.

எதையும் பேசி நிதானமாகச் சிந்தித்து செயலாற்றுவதே அவர்களுக்கும் மக்களுக்கும் நல்லது.

இத்தகைய முரண்பாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்த்து வைப்பதுடன் குறித்த முரண்பாடுகளை மேன்மேலும் வளர்வதைத் தவிர்க்க ஊடகங்களும் உதவி செய்ய வேண்டும்.

## உண்ணாநோன்பின் 6வது நாளில் முருகன்

(சென்னை)

வேலூர் சிறையில் 6 ஆவது நாளாக நேற்றும் உண்ணாவிரதம் இருந்த முருகனுக்கு வைத்திய பரிசோதனை நடந்தது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை கைதி முருகன் சிறையில் ஜீவசமாதி அடைய வேண்டி கடந்த 18ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

உண்ணாவிரதம் மேற்கொள்ளும் முருகனுக்கு சிறையில் கைதிகள் அனுபவிக்கும் அனைத்து சலுகைகளும் கடந்த திங்கட்கிழமை முதல் இரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில் வேலூர் சிறையில் முருகனை நேற்று முன்தினம் அவரது சட்டத்தரணி புகழேந்தி சந்தித்தார்.

முருகன் சிறையில் ஜீவசமாதி அடைய அனுமதி கேட்டு சிறைச்சாலை பொறுப் பதிகாரி சண்முகசுந்தரம் ஊடாக பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கோரிக்கை மனுவை சட்டத்தரணி புகழேந்தி காண்பித்தார்.

அதில் கடந்த 18 ஆம் திகதி முதல் அனைத்து உண வினையும் நிறுத்தி கிருஷ்ணரின் பாதங்களில் பற்றிக் கொள்ளும் ஜீவசமாதி நிலைககான பயணத்தினை நோககி போகிறேன். எனது இந்த உறுதியான பயணத்திற்கு யாரும் எவ்வித இடையூறும் செய்திடாத படிக்கு தகுந்த அனுமதியும், ஆணையும் அல்லது பரிந்துரையும் வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

முருகன் நேற்று 6 ஆவது நாளாக உண்ணாவிரதம் மற்றும் மௌனவிரதம் மேற கொண்டார். 3 வேளை தண்ணீர் மட்டும் குடிக்கிறார்.

அவரது அறைக்கு முன்பு 24 மணி நேரமும் சிறைக் காவலர்கள் நிறுத்தப்பட்டு கண்காணிப்படுகிறார்.

முருகன் உடல் சோர்வடைந்து வருகிறது. காலை, மதியம், இரவு 3 வேளைகளிலும் வைத்திய பரிசோதனை செய்யப்படுகிறது.

முருகன் உடல்நிலை மோசமானால் அவருக்கு கட்டாய உணவு, வைத்திய சிகிச்சைகள் செய்யப்படும் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (3-8)

## மஹோற்சவம்

இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ-10-134)

## முன் ஆயத்தமில்லாப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி Raveens EMC நிறுவனத்தின் முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்) பரிசளிப்பு விழாவும் (IMPROMPTU ORATORY (English) AND PRIZE GIVING DAY) நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு பருத்தித்துறை கிராமக் கோடு பிரதான வீதியில் அமைநதுள்ள S.S.COMPLEX இல் இடம்பெறும்.

ரவீன்ஸ் EMC நிர்வாகி ப.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். (இ-3)

## விண்ணப்பம் கோரல்

யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் HNDIT & HND in Engineering கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களிடமிருந்து தற்காலிக பயிற்சியாளர் (Temporary Demonstrator) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட சுய விபரக் கோவையினை 31.08.2017 இற்குள் பணிப்பாளர் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம், இல. 665/2, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொளளப்படுகின்றீர்கள் என உதவிப் பதிவாளர் யோ. ரிசாந்தன் அறிவித்துள்ளார். (இ)

## இளம் குடும்பப்பெண் மீது அசிட் வீச்சு!

### குழந்தைக்கும் பாதிப்பு

(கொழும்பு)

களுத்துறை - கட்டுகுருந்த வடக்கு சனச சங்கத்தின் தலைவராக செயற்பட்டு வரும் இளம் குடும்பப் பெண்ணொருவர் மீது அசிட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இரவு இடம் பெற்றுள்ளதுடன், இதில் பெண்ணொருவரும் அவரின் ஐந்து வயது குழந்தையும் பாரிய தீக்காயங்களுக்கு உள்ளாகி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

36 வயதான குறித்த பெண்ணுக்கு பாரிய தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளதால் இதுவரை வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடன் விவகாரம் தொடர்பில் இந்த அசிட் வீச்சு தாக்குதல் இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், பெண்ணொருவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனவும் பொலிஸாரினால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. .

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

### இறை அருள்

இல்லத்தில் செல்வம் செழிக்கவும் மங்களம் தங்கவும் முன்னோர் அருளிய வழிபாட்டு முறைகள்



#### நாடிப் பொருத்தம் என்றால் என்ன?

நாடிப் பொருத்தம் என்பது மாங்கல்ய பலம் மற்றும் புத்திரர்களது ஆரோக்கியத்தைக் குறிக்கும்.

பெண் நாடியும் ஆண் நாடியும் வெவ்வேறாக இருக்கவேண்டும். சமான நாடியாக அமைந்தால் தோஷம் இல்லை.

**1.பார்கவ நாடி (அ) வாத நாடி**

அஸ்வினி, திருவாதிரை, புனர்பூசம், உத்தரம், அத்தம், கேட்டை, மூலம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி

**2.மத்ய நாடி (அ) பித்த நாடி**

பரணி, மிருகசீரிடம், பூசம், பூரம், சித்திரை, அனுஷம், பூராடம், அவிட்டம்.

**3.சமான நாடி (அ) சிலேத்தும நாடி**

கிருத்திகை, ரோகினி, மகம், சுவாதி, விசாகம், ரேவதி, திருவோணம், ஆயிலியம், உத்தராடம். (தொடரும்)




தனிமையில் தவமிருந்த அவளை, அவ்வழி சென்ற இலங்கேஸ்வரன் நோக்கினான். ஒரு காட்டுப் புஷ்பம் போல் விகசித்து வீற்றிருந்த அந்தக் கட்டழகி வேதவதியைக் கண்டவுடன் காமமுற்றான். அவள் தவத்தைக் கலைத்தான். தனது தாரமாகச் சொன்னான். வேதவதி மறுத்தாள். நாராயணனையே தன் மனம் நாடுவதாகச் சொன்னாள்.

இராவணனோ விடுவதாயில்லை. வேதவதியை வீழ்த்திவிடும் எண்ணத்துடன் நெருங்கினான். வேதவதி விதிர்விதித்தாள். தன் கற்புக்குப் பங்கம் நேருமோ எனப் பதைத்தாள். தவத்தால் பெற்ற வலிமையால் தன்னைச் சுற்றி யோகத்தீ வளர்த்தாள். அந்த அக்னியில் அமிழ்ந்தாள்.

அக்னியின் நாக்குகள் அவளை அணைத்துக் கொள்ளுமுன் " அறிவிலியே விருப்பமில்லாப் பெண்ணைப் பங்கப்படுத்த முயன்ற பாதகனே என்னைப் போலொரு பெண்மேல் நீ கொள்ளும் மோகமே உன்னைக் கொல்லும். உன் குலத்தையும் வேரறுக்கும்" என இராவணனைச் சபித்தாள். அக்னி அவளை அவிசாக ஏற்கவில்லை. மாறாகப் பொத்தி வைத்துக் காத்திருந்தான். (தொடரும்)

## சத்திய தரிசனம்



### சேவையால் சுகம் பெறலாம்

❖ ஆடம்பரமின்றி எந்தச் செயலையும் செய்ய வேண்டும். ஆடம்பரம் என்பது அரக்க குணம். பொருள் உள்ளவனின் ஆடம்பரத்தைக் கண்டு, இல்லாதவன் ஏக்கம் கொள்கிறான். இதனால் விருப்பு வெறுப்பு உண்டாகிறது.

❖ பிறருக்கு நம்மால் முடிந்த சேவைகளைச் செய்வதால் மனஅமைதி உண்டாகிறது. தன்னலத்தை மட்டும் கருத்தில் கொண்டு பொருள் சேர்ப்பவர்களுக்கு வாழ்வில் சுகம் உண்டாகலாம். ஆனால், ஆத்மசுகம் என்னும் தெய்வீக நிலை சேவையால் மட்டுமே கிடைக்கும்.

❖ சென்றதைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. வருங்காலம் என்பது நம் கையில் இல்லாதது. நிகழ்காலம் ஒன்று தான் நம்கையில் இருப்பது. அதை பயனுள்ள வகையில் கழிப்பதே அறிவுடைய செயல்.

❖ வேறொன்றையும் நீங்கள் செய்ய வேண்டாம். அன்பை மட்டும் வளர்த்துக் கொள்ளுங்கள். மனிதன் ஒவ்வொருவனும் கடவுளின் குழந்தை என்ற உண்மையை உணர்ந்து யாருக்கும் சிறுதீங்கு கூட எண்ணாதீர்கள். பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்பு கொடுங்கள்

## இரும்புச்சத்து அகத்துறிஞ்சலை அதிகரிக்கச் செய்திடுவோம்!

விற்றமின் சி அதிகமுள்ள புளிப்பான பழங்களை உணவு வேளையின் பின் உண்போம்.

சமையலின் பின் எலுமிச்சம்பழச்சாறை கறிகளுக்குச் சேர்த்திடுவோம்.

கடலை, பயறு போன்றவற்றை 24 மணித்தியாலம் ஊறவைத்து முளையரும்பிய பின்னர் சமைத்திடுவோம்.

உணவு உண்பதற்கு முன்பாகவோ பின்பாகவோ தேநீர், கோப்பி அருந்துவதைத் தவிர்த்திடுவோம்..

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகை நகர் சனசமூக நிலைய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## ஐயனார் வெற்றி

அம்பிகைநகர் சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அம்பிகை நகர் சனசமூக நிலையமும், அம்பிகைநகர் ஸ்ரீ மகேஸ்வரி வி.கழகமும் இணைந்து நடத்திய உதைபந்தாட்ட போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் 19வயதிற்குட்பட்ட அணியுடன் B அணியின் 3 வீரர்கள் விளையாடிய நிலையில் முதலாவது போட்டியில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக் கழகத்துடன் மோதியதில் 2.1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



அடுத்த சுற்றுக்கான போட்டியில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியுடன் மோதியதில் 0.0 என்ற ரீதியில் போட்டி முடிவடைந்த நிலையில் தண்ட உதைமூலம் 2-4 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. (க)

# உருத்திரபுரம் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்த தொடரில் (21.08.2017) அன்று நடைபெற்ற சில ஆட்டத்தின் முடிவுகள் வருமாறு.

முதலாவது போட்டியில் பரந்தன் இளைஞர் வட்டம் அணியினை எதிர்த்து திருவையாறு மத்தி அணி போட்டியிட்டது. இதில் பரந்தன் இளைஞர் வட்டம் அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் உழவர் ஒன்றிய அணி யினை எதிர்த்து விளைபூமி அணி மோதியது இப் போட்டியில் 2:1 என்ற கணக்கில் கோல் உழவர் ஒன்றிய அணி வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் கனகபுரம் அணியினை எதிர்த்து பரந்தன் மத்தி அணி மோதியது இதில் கனகபுரம் அணி 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கர்ணன் சிறப்பாட்டம்

# செவிப்புலன் அற்றோர் உதைபந்து கிண்ணத்தை வென்றது யாழ்.அணி

(யாழ்ப்பாணம்)

வட கிழக்கின் நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி செவிப்புலன் அற்றோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த வாரம் மட்டக்களப்பில் இடம் பெற்றது. இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டம், மன்னர் மாவட்டம் வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்கு பற்றின.

இந்தச் சுற்றுப் போட்டியில் பிரதிநிதித்துவப்படுத்தி வல்வை வீரன் சுப்பிரமணியம் கர்ணன் பங்கேற்றிருந்தார். சுற்றுப் போட்டியில் யாழ். அணி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது. யாழ். அணி மொத்தம் 9 கோல்களைப் பெற்றது. இதில் 8 கோள்களை வல்லை வீரர் செல்வன் கர்ணன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுற்றுப் போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாகவும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராகவும் செல்வன் கர்ணன் தெரிவு செய்யப்பட்டமை மேலும் குறிப்பிடத்தக்கது.

சுப்பிரமணியம் கர்ணன் யாழ். கைதடியில் அமைந்துள்ள செவிப்புலன் அற்றோருக்கான பாடசாலையில் (J/ Kaithady nuffield school) இல் கல்வி கற்றுள்ளார். (க)



# அரையிறுதிக்கு சென்றது செந்தமிழ் உடுத்துறை







புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட தொடரில் (22. 08. 2017) அன்று நடைபெற்ற போட்டியில் புதுக்குடியிருப்பு சுப்பேர்ப்றாங் விளையாட்டுக் கழகத்தை உடுத்துறை செந்தமிழ் அணி எதிர்கொண்டது. இதில் சுப்பேர்ப்றாங் அணி 3:1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆனால் செந்தமிழ் அணி புள்ளி விபர அடிப்படையில் முன்னிலையில் நிற்பதனால் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)



யா/உடுத்துறை மகாவித்தியாலயம் சார்பில் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 60m, 100m ஓட்டப் போட்டிகளில் முறையே முதலாம்,இரண்டாம் இடங்களை பெற்று தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளிற்கு தெரிவான உடுத்துறை பாரதி கழக உறுப்பினர் சசிக்குமார் இந்துஜன் அண்மையில் கௌரவிக்கப்பட்ட போது.

# சமநிலை தவிர்ப்பு உதையில் துறையூர் ஐயனார் வெற்றி

சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் வேலணை துறை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் 19 வயதிற்குட்பட்ட அணியுடன் Bஅணியின் 3 வீரர்கள் விளையாடிய நிலையில் முதலாவது போட்டியில் அல்லைப் =பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் மோதியதில் 0-0 என்ற சமநிலையில் முடிவடைந்த நிலையில் தண்ட உதை மூலம் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்த சுற்றுப் போட்டியில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக் ளளகழகத்துடன் மோதியதில் அதில் 1-1 என்ற கோல் கணக்கில் முடிவடைந்த நிலையில் தண்ட உதை மூலம் 2-4 என்ற கோல் கணக்கில் தோல்வி யடைந்தது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் தொல்லை...

நேற்று காலை 9.30 மணியளவில் பிரஸ்தாப குடும்பஸ்தர் அவரது வீட்டில் மருந்தை அதிகளவு குடித்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வேளையில் வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் நேற்று இரவு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (செ-30)

## டெங்கு...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையானது கடந்த ஆண்டு டெங்கு நோய்க்கு உள்ளானவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமானதாகவுள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ப.சத்தியமூர்த்தி. இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

டெங்கு நோயின்தாக்கமானது நாடு தழுவிய ரீதியில் அதிகரித்துள்ளது.

அந்த வகையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்நோயின் தாக்கத்திற்குள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் உயிரிழந்துள்ளார்கள். மேலும் இந்நோயின் தாக்கத்தை அவதானிக்கின்ற போது யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டில் மொத்தமாக டெங்குநோயால் அனுமதிக்கப்பட்டவர்களது அளவினை விட இவ் ஆண்டில் இதுவரையான காலத்தில் டெங்கு நோய்தாக்கத்திற்குள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்கிற்கும் அதிகமாகவுள்ளது.

குறிப்பாக கடந்த 2014ஆம் ஆண்டு ஆயிரத்து 339பேர் டெங்கு நோய்த்தாக்கத்திற்குள்ளாகியிருந்ததுடன் அவர்களில் ஒருவர் உயிரிழந்துமிருந்தார். அதேபோன்று 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 309 பேர் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களில் இருவர் உயிரிழந்திருந்தார்கள்.

2016ஆம் ஆண்டு 670 பேர் டெங்கு நோய்தாக்கத்திற்குள்ளாகியதுடன் அவர்களில் இருவர் உயிரிழந்திருந்தனர். இதேவேளை இவ்வாண்டில் கடந்த 21ஆம் திகதி வரை டெங்கு நோய்தாக்கத்திற்குள்ளாகி ஆயிரத்து 702 பேர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களில் இருவர் உயிரிழந்திருந்துள்ளதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ-4)

## மாகாண சபை...

கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிகட்சிகளுக்கும் இடையில் பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் ஒரு சில கட்சிகளுடன் குழப்பங்களும் வடக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது.

இதன் பின்னர் பல்வேறு குழப்பங்கள் நடைபெற்ற போதிலும் முதலமைச்சர் தனது தற்துணிவு அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சர்கள் நால்வரை நியமித்திருந்தார். அதன் அடிப்படையில் ஞானசீலன் குணசீலன்-சுகாதாரமும் சுதேச மருத்துவமும் மற்றும் நன்னடத்தையும், சிறுவர் பராமரிப்பு சேவைகளும் ஆகியவற்றின் அமைச்சராகவும், கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சராக க. சர்வேஸ்வரனும், கந்தையா சிவநேசன் விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றின் அமைச்சராகவும்,

திருமதி அனந்தி சசிதரன் மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழில் துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும், மற்றும் வர்த்தகமும் வாணிபமும் ஆகியவற்றின் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த புதிய அமைச்சரவையுடனேயே இன்றைய தினம் வடக்கு மாகாண சபையின் அமர்வு கூடுகின்றது. இந்த கூட்டத்தில் பெரிதான குழப்பங்கள் எதுவும் நடைபெறாது என எதிர்பார்க்கப்பட்டுள்ள போதிலும்,

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் டெனிஸ்வரன் என்ன செய்ய போகின்றார்? என்பதே பலருடைய எதிர்பார்ப்பாக உள்ளது. இதேவேளை தனது பதவியை முதலமைச்சர் நீக்க முடியாது எனவும் அவ்வாறு நீக்கினால் தான் நீதிமன்றுக்கு செல்வேன் எனவும், அவர் நீதியரசர் என்றால் தான் சட்டத்தரணி எனவும் டெனீஸ்வரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## வடக்கு மாகாண...

அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றின் அமைச்சராகவும்,

ஞானசீலன் குணசீலன்-சுகாதாரமும் சுதேச மருத்துவமும் மற்றும் நன்னடத்தையும், சிறுவர் பராமரிப்பு சேவைகளும் ஆகியவற்றின் அமைச்சராகவும், திருமதி அனந்தி சசிதரன்-மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழில் துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும், மற்றும் வர்த்தகமும் வாணிபமும் ஆகியவற்றின் அமைச்சராகவும் பதவியேற்று கொண்டுள்ளனர். இதேவேளை கந்தையா சர்வேஸ்வரன் ஏற்கெனவே கல்வி பண்பாட்டு விளையாட்டு துறை அமைச்சராக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மருத்துவர் இன்மை;...

வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

வவுனியா பெரிய தம்பனை பகுதியை சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயாரான மனோன்மணி விஜயகுமார் (வயது 39) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவர்.

பிரஸ்தாப பெண் சவுதி அரேபியாவில் இரண்டு வருடங்களாக பணியாற்றி விட்டு விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ளார். கடந்த 10ஆம் திகதி வந்த இவர் மீண்டும் சவுதி நாடடுக்கு செல்ல வேண்டும் என கோரியுள்ளார்.

அதற்கு உறவினர்கள் மறுப்பு தெரிவித்ததை அடுத்து கடந்த 15ஆம் திகதி இரவு 7 மணியளவில் நஞ்சை அருந்தி தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

உடனடியாக இவரை பண்டிவிரிச்சான் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, அங்கு மருத்துவர் இல்லாத காரணத்தால் முதலுதவி வழங்கப்படவில்லை. பின்னர மடு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அங்கும் மருத்துவர் இல்லாத காரணத்தால் முதலுதவி வழங்கப்படவில்லை.

பின்னர் இரவு 9 மணியளவில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு முதலுதவி வழங்கப்பட்டதுடன் மறுநாள் 16 ஆம் திகதி காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பிரஸ்தாப பெண்ணுக்கு தொடர்ச்சியாக சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவருடைய மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## கேப்பாப்பிலவு...

கின்ற நிலையில், நாடாளுமன்ற கட்டட தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்றைய தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இராணுவ உயரதிகாரிகள் மற்றும் கேப்பாப்புலவு மக்கள் பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, இக் காணிகளை விடுவிக்க இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளதோடு, அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைவாக இக் காணிகளை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்தோடு, அப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை வேறொரு இடத்திற்கு மாற்றுவதாகவும், இராணுவம் பயன்படுத்திய கூடாரங்களை சேதப்படுத்தாமல் மக்களுக்கு கையளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், மக்களுக்கு சொந்தமான பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கான இழப்பீடுகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 8 வருடங்களாகின்ற போதிலும், காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் வடக்கில் குறிப்பாக கேப்பாப்புலவு பூர்வீக கிராம மக்கள் கடந்த 6 ஆறு மாத காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் கொழும்பிற்கு வந்தும் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, ஜனாதிபதி செயலகத்தில் மகஜரொன்றையும் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற தனியாருக்கு சொந்தமான மேலும் 111 ஏக்கர் காணியை விடுவிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து தெரிவித்த அமைச்சர் கயந்த கருணாதிலக இத்னை கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் குறித்த இடத்தை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை இராணுவத் தளபதி வழங்கியுள்ளதாகவும் அதற்கமைய அந்த இடத்தில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி வேறு இடங்களில் அமைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கமைய இவ்வாறு அகற்றப்படும் இராணுவ முகாம்களை வேறு இடங்களில் அமைத்துக் கொள்ள தேவையான நிதியை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(செ-11)

## முறிகள் கொடுக்கல்...

புத்தசாசன அமைச்சர் பதவிகளில் இருந்து நேற்று நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பிலான ஜனாதிபதியின் கடிதம் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அதன் தலைமைத்துவம் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப, விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்நிலையில் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட விஜேதாஸ ராஜபக்ஷ நேற்று நீதியமைச்சிற்கு சென்று அதன் ஊழியர்களை சந்தித்தார். இதன்போது, விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்ததாவது,

சட்ட மா அதிபர் திணைக்களத்தை நான் சுயாதீனமாக நடத்திச் சென்றமையால் முறிகள் ஆணைக்குழுவின் மூலமாக மக்கள் பல்வேறு விடயங்களை எதிர்பார்த்தனர். இந்த கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாம் செயற்பட்டோம். சட்ட மா அதிபர் திணைக்களத்தினூடாக இதனை சுயாதீனமாக நடத்திச் செல்லும் போது இந்த நீதியமைச்சர் இருந்தால் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவார்கள் என நினைத்தார்கள். அதனால் இந்த நீதியமைச்சரை வெளியேற்றிவிட்டு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் முதுகெலும்பை உடைக்கும் எதிர்பார்ப்பில் உள்ளனர். கடந்த 17ஆம திகதி சட்ட மா அதிபரை அலரி மாளிகைக்கு அழைத்து பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்ட மா அதிபரை தரக்குறைவாகப் பேசியுள்ளனர். தாம் தெரிவு செய்த வழக்குகளை இரண்டு வாரங்களுக்குள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர். வழக்குகள் தாமதமடைவதாகத் தெரிவித்து முறிகள் கொடுக்கல் வாங்கலை மறைக்கும் முயற்சியே இடம்பெறுகின்றது என தெரிவித்தார். (செ-11)

## முதலமைச்சரை...

மைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண அமைச்சர் நியமனம் தொடர்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.சிறிகாந்த எழுதிய கடிதத்திற்கு பதில் கடிதம் எழுதுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதலமைச்சர் தனது கடிதத்தில்,

திரு.ந.ஸ்ரீகாந்தா அவர்கள்
செயலாளர் நாயகம்
தமிழீழ விடுதலை இயக்கம்
அன்புடையீர்,

தங்கள் 22.08.2017ஆம் திகதிய கடிதம் கிடைத்தது.

நாம் இருவேறு கடமைகளில் ஈடுபட்டுள்ளோம். கட்சி நலம் கருதி சிபார்சு செய்வது உங்கள் பொறுப்பு. ஆட்சி நலம் சார்ந்து நடவடிக்கை எடுப்பது முதலமைச்சர் பொறுப்பு. கட்சிகளால் நியமிக்கப்பட்டவர்கள் அல்லாது பிறரை முன்னைய அமைச்சரவையில் உள்ளடக்கியதாக நீங்களே குறிப்பிட்டுள்ளீர்கள். அது வாஸ்தவமே. அமைச்சர்களை நியமிப்பது முதலமைச்சரின் பொறுப்பு. அப்பொறுப்பானது உங்களை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்சித்தலைவர்கள் யாவராலும் அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கும் போது தகைமை, கட்சி, மாவட்டம், பால் சமநிலை, மக்கள் செல்வாக்கு, கூட்டுறவு மனப்பான்மை போன்ற பலதையும் மனதிற் கொண்டே முதலமைச்சர் அமைச்சர்களை நியமிக்கின்றார்.

வெறுமனே கட்சி அடிப்படையிலும் கட்சியின் தலைமைத்துவத்தின் விருப்பு வெறுப்புக்களுக்கும் அமைய நியமனங்கள் அமைவதில்லை. கூடியவரையில் கட்சியின் சிபார்சுகள் சிந்தனைக்கு எடுக்கப்படுவன. கட்சிகள் எடுக்கும் தீர்மானங்கள் சிபார்சுகளே அன்றி ஒரு முதலமைச்சரைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகக் கொள்ளக் கூடாது.

ஆனால் அவ்வாறான புறக்கணிப்புக்கள் அரசியல் ரீதியாக ஒரு முதலமைச்சரை வெகுவாகப் பாதிக்கக் கூடியவை என்பதை நான் நன்றாக உணர்ந்தவன். அதற்காகக் கட்சிகளின் தலைமைத்துவம் கூறுகின்றார்கள் என்ற ஒரே காரணத்துக்காக எனது தீர்மானங்களைப் பிறழச் செய்வதற்கு நான் தயாரில்லை.

உங்கள் கட்சியானது இருவரில் ஒருவர் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப் போவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்தது. அவ்விருவரில் ஒருவரான வைத்திய கலாநிதி ஒருவேளை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் எனது பணி இலகுவாக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு நடைபெறாததால் எனது தற்துணிபுரித்தை நான் பாவிக்க வேண்டி வந்தது.

திரு.விந்தன் கனகரத்தினத்தின் மீது எனக்கு எந்த வித மனஸ்தாபமும் இல்லை. அவர் எமக்குப் பல விதங்களிலும் வேண்டியவர். உதவி செய்தவர். எமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். ஆனால் பல வித காரணங்கள் அவரை சுகாதார அமைச்சராக நியமிக்க முடியாது என்னைத் தடுக்கின்றன. புளொட்டைச் சேர்ந்த சிவநேசன் அவர்களுக்கு ஏற்கெனவே ஒரு அமைச்சர் பதவி கொடுக்கப்பட இருந்தமையை விந்தன் கனகரத்தினத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தேன். அதை அவர் ஏற்றும் இருந்தார். அதனால்தான் சுகாதார அமைச்சைக் கொண்டு நடத்தக் கூடிய வல்லமை தனக்குள்ளதென அறிவித்திருந்தார்.

விந்தன் அவர்களுடன் தொடர்ந்து நல்லெண்ணத்துடன் எமது பணிகளை நடத்திச் செல்லவே நான் விரும்புகின்றேன். கட்சி அதற்குத் தடையாக இருக்காது என்று நம்புகின்றேன். மக்கள் சேவையைக் கருத்தில் வைத்து எமது தனியான விருப்பு வெறுப்பு க்களைத் தியாகம் செய்து முன்னேற முன்வர வேண்டும் என்று உங்களிடமும் உங்களின் கட்சியிடமும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் வடமாகாணம். (செ-11)

## அமைச்சு பதவி...

விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சர் பொறுப்பில் இருந்து நீக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்திருந்தார். அதை முறைப்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஏற்றுக் கொண்டார்.

ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான விஜயதாஸ ராஜபக்ஷ அண்மையில் அரசுக்கு எதிரான விமர்சனங்களை வெளியிட்டதாக அவரது கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் குற்றம்சாட்டினர்.

அவரை அமைச்சர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்றும் அவரது கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்தனர்.

குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 சதவீத பங்குகளை சீன நிறுவனமொன்றுக்கு கையளிக்க ஒப்பந்தம் செய்தது தொடர்பாக அவர் விமர்சனங்களை வெளியிட்டார். தனது கருத்தைத் திரும்பப் பெறப் போவதில்லை என்றும் அவர் உள்நாட்டு ஊடகமொன்றிடம் கூறியிருந்தார். இந்த நிலையில் விஜயதாஸ ராஜபக்ஷ, அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள் ளார்.

முன்னதாக, திருகோணமலையில் இரு நாட்களுக்கு முன்பு விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகையில், இலங்கை உள்நாட்டு போரின் போது நடைபெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்தமைக்காகவே இவ்வாறு இலக்கு வைக்கப்படுவதாகக் கூறியிருந்தார்.

நாட்டையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க பௌத்த மகா சங்கம் முன் வர வேண்டிய காலம் வந்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

சட்ட வல்லுநரான விஜயதாஸ ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் மூல்ம் நாடாளுமன்றத்திற்கு தேர்வானார். 2004-2010 வரையிலான ஆட்சியில் அரசியலமைப்பு அமைச்சராகவும் அவர் பதவி வகித்துள்ளார்.

பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்த அவர், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வானார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றம் நிரூபிக்கப்பட்டால்...

வருமே நிரபராதிகள் என்றும் எம்மால் யாரையும் நியாயம் தீர்க்கவும் முடியாது எனவும் தெரிவித்த கடற்படைத் தளபதி, அனைத்தையும் சட்டத்தின் கையில் ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இலங்கையின் 21ஆவது கடற்படைத் தளபதியாக அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட தமிழரான வைஸ் அட்மிரல் சின்னையா, நேற்றைய தினம் தனது முதலாவது ஊடக சந்திப்பை கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் நடத்தினார்.

இந்நிலையில் கடந்த காலங்களாக கொலை, கடத்தல், போர்க் குற்றங்கள் மற்றும் சித்திரவதை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட விவகாரத்தில் நீதிமன்றத்தின் உத்தரவில் முன்னாள் கடற்படைத் தளபதி உட்பட பல சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.

எனவே கடற்படைக்கு ஏற்பட்டுள்ள இப்படியான கரும்புள்ளிகள் குறித்து உங்களது நிலைப்பாடு என்ன என்பது பற்றி ஊடகவியலாளர்கள் கடற்படைத் தளபதியிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த வைஸ் அட்மிரல் டிரவிஸ் சின்னையா எதுவுமே நிரூபிக்கப்படும் வரை அனைவரும் நிரபராதிகளாகும். எவரையும் நியாயம் தீர்ப்பதற்கு எம்மால் முடியாது. அதனை சட்டத்தின் கையில் ஒப்புவிக்க வேண்டும். ஒரு கடற்படைத் தளபதியாக இதனைக் கூறுகின்றேன்.

எமக்கு ஒரு நீதிமன்றம் இருக்கிறது. அதேபோல கடற்படைச் சட்டமும் காணப்படுகிறது. அந்த வகையில் ஏதாவதொரு குற்றச்சாட்டில் சிக்கியிருந்து அது சிவில் அல்லது கடற்படை மன்றில் நிரூபிக்கப்பட்டால் நிச்சயம் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

சீருடையில் ஏதாவது குற்றங்களை செய்திருந்தாலும் நிச்சயம் தண்டனை வழங்கப்பட வேண்டும். இராணுத் தளபதி அண்மையில் இப்படியொரு விடயத்தைக் கூறியிருந்தார்.

இராணுவ சிப்பாய் ஒருவர் கொலைகாரராக முடியாது. அதேபோல கொலைகாரருக்கு இராணுவ வீரராக முடியாது. நானும் அதற்கு உடன்படுகிறேன்.

நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் அல்லது குற்றத்தை நீங்கள் செய்திருந்தால் அதற்கு மன்னிப்பே கிடையாது.

நீங்கள் போரில் எவ்வளவு பெரிய காரியங்களை நிகழ்த்தியிருந்தாலும் பெரிய ஹீரோவாக விளங்கி யிருந்தாலும் அது கணக்கில் எடுக்கப்படாது.

இந்த சீருடை எந்த கொலைக்கோ அல்லது குற்றங்களுக்கோ அனுமதிக்காது. அதேபோல சித்திரவதைகளை செய்யவும் அனுமதிக்காது. இந்த விடயத்தில் இதுவே எனது நிலைப்பாடாகும் என்று தெரிவித்தார்.

இதேவேளை கடற்படை தளபதி டிரவிஸ் சின்னையா அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் உறுப்பினர் என்றும், அவரால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் ஒன்றிணைந்த எதிர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச அண்மையில் பகிரங்கமாக கூறி யிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக கடற்படைத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள் வினவினர். அதற்கு பதிலளித்த அவர்,

அமெரிக்க முகவராக நியமிக்கப்பட்டால் அது எமது நாட்டிற்கே நன்மையாகும். அப்படி நியமிக்கப்பட்டால் அதிகமான வேலைகளை செய்துகொள்ள முடியும்.

அமெரிக்க முகவராகினால் அடுத்தபக்கம் மாற்றுவதற்கு முடியும் என்று இலங்கையர்கள் நினைத்தால் அவ்வாறு முடியாது என்று நான் நினைக்கின்றேன். நாங்கள் நாட்டிற்காக 35 வருடங்கள்யுத்தம்செய்தவர்கள்.

அவ்வளவு சுலபமாக எம்மை மாற்றுவது முடியாது. நான் அமெரிக்க பசுபிக் கமாண்டராக பணிபுரிந்தபோது அங்கிருந்து பயிற்சி, பொருட்கள், கண்ணிவெடி மீட்பு, மீள்குடியேற்றம் என்பவற்றை கற்றுவந்து எமது படையினரை விருத்தி செய்வதற்கே நான் முயற்சித்தேன்.

மீண்டும் இலங்கைக்கு வராமல் அங்கிருந்தே பணி செய்திருக்கலாம். ஆனால் எங்கு சென்றாலும் எமது படை, நாட்டின் அபிவிருத்தியையே நான் செய்தேன். இதுகுறித்து பலர் பலவிதமாகவும் சித்திரிக்கலாம் ஆனால்அதில்உண்மையிருக்காது என்றார் கடற்படை தளபதி சின்னையா. (செ-11)

## பொலிஸாரால்...

வவுனியா பறையனாலங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெனிக்பாம் பாடசாலை வீதியில் அமைந்துள்ள புகையிரதக் கடவை வீதியில் கடந்த நான்கு ஆண்டுகளாக பணியாற்றி வரும் பரமசிவம் குவேந்திரன் (வயது 25) என்பவருக்கே பொலிஸார் நேற்று முன்தினம் உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வடக்கு கிழக்கு புகையிரத கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே.றொகான் ராஜ்குமார் முறைப்பாடு அளித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தபின்னர் கருத்து தெரிவித்த எஸ்.ஜே.றொகான் ராஜ்குமார் மன்னார் மதவாச்சியை இணைக்கும் புகையிரதச் சாலையில் பணியாற்றிவரும் எமது ஊழியருக்கு எதிராக பொலிஸார் பொய் குற்றச்சாட்டை சுமத்தியதுடன் ஊழியரின் தாயாரிடம் உமது மகனை வேலைக்கு அனுப்ப வேண்டாம்; அவ்வாறு அனுப்பினால் பிணமாகவே எடுத்துச்செல்ல வேண்டியிருக்கும் என நேரடியாகவே அச்சுறுத்தல் விடுத்ததுடன் வேலையை ராஜினாமா செய்து கடிதத்தை பறையனாலங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என பொலிஸாரினால் அறிவுறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட ஊழியருக்கு நீதி கிடைக்கும்வரை இன்று நள்ளிரவு 12.00 மணியிலிருந்து வடக்கில் அனைத்து புகையிரதகடவை காப்பாளர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். (செ-250)

## இலஞ்சம் வாங்...

திற்கு முன்பாக அமைந்துள்ள வன. வள பாதுகாப்பு திணைக்களத்தில் பணியாற்றும் தென்பகுதியைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்கள் நேற்று பகல் 11.00மணியளவில் அலுவலகத்தில் வைத்து இலஞ்சம் வாங்கிய சமயத்தில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்டனர்.

பொதுமக்களினால் வழங்கப்பட்ட இரகசிய முறைப்பாட்டிற்கு அமைவாகவே இவ் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இரு உத்தியோகத்தர்களும் நேற்று மாலை வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சமயத்தில் இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (செ-250)

## மாகாண சபை...

பிடங்கள் மாற்றியமைக்கப்பட்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்கள் அமைச்சர்களுக்கான ஆசனத்தில் அமரவுள்ளனர்.

எனினும் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் எங்கு அமர்ந்து கொள்ள போகின்றார் என்பது குறித்து நேற்றுவரை தீர்மானிக்கப்படவில்லை.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை அடுத்து வடக்கு அமைச்சரவை மற்றும் வடக்கின் அரசியல்நிலைமைகளில்பல்வேறு சர்ச்சைகளும் குழப்பங்களும் இடம்பெற்றிருந்தன.

குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர்கள் நீக்கப்பட்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கும் பொறுப்பில் முதலமைச்சருக் 23

## வடக்கு மாகாணசபைக்கு...

அமைச்சரவை மற்றும் வடக்கின் அரசியல் நிலைமைகளில் பல்வேறு சர்ச்சைகளும் குழப்பங்களும் இடம்பெற்றிருந்தன. குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள் நீக்கப்பட்டு புதிய அமைச்சர்களை நியமிக்கும் பொறுப்பில் முதலமைச்சருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் பங்காளிகட்சிகளுக்கும் இடையில் பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் ஒரு சிலகட்சிகளுடன்குழப்பங்களும் வடக்கில் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்தது.

அதன் தொடர்ச்சியாக கல்வி மற்றும் விவசாய அமைச்சர்கள் இருவரும் தமது பதவியை இராஜினாமா செய்திருந்தனர். ஏனைய சுகாதாரம் மற்றும் போக்குவரத்து அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமா செய்யாது இருந்தனர். அதன் காரணமாக வடமா காணசபையில் பாரிய இழுபறி, குழப்பங்கள் நிலவிவந்தன. இந்த நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் புதிய அமைச்சராக க.சர்வேஸ்வரனும் வடமாகாண சிறுவர் மற்றும் மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சின் புதிய அமைச்சராக திருமதி அனந்தி சசிதரனும் பொறுப்பேற்றிருந்தனர்.

பலகுழப்பசூழ்நிலைக்கு பின்னர் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அண்மையில் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். ஆனால்போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது பதவியை இராஜினாமா செய்ய முடியாது என பிடிவாதமாக இருந்த காரணத்தினால் அவருடைய கட்சி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக அறிவித்து கட்சியில் இருந்து 6 மாதகாலம்நீக்கியிருந்தது. அதனை தொடர்ந்து வடக்கு அமைச்சரவையில்இருந்து டெனீஸ்வரனை முதலமைச்சர் நீக்கியிருந்தார்.

இதனை தொடர்ந்தே நேற்றையதினம் புதிய அமைச்சர்கள் வடக்கு மாகாண ஆளுநர் முன்னிலையில் பதவி ஏற்றுள்ளனர். முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, மின்சாரம், வீடமைப்பு மற்றும் கட்டுமானம், சுற்றுலாத்துறை, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து, ஏற்றுமதி அமைச்சராகவும், கந்தையா சிவநேசன் விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை 23


### பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப் பெண் தேவை.

T.P : 077 328 2051 (213)

### நடமாடும் மிருகவைத்திய சேவை

சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். Dr.K.கிருபாகரன்

0779738802

(208) முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.

### Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்

புதிய சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.

கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293

### தவறவிடப்பட்டது

புத்தளம், கற்பிட்டியை சேர்ந்த மனுவல் அன்ரனி ஜேசுதாசன் என்பவருடைய Nic (02) Driving License, Bank of Ceylon புத்தகம் என்பன தவறவிடப்பட்டுள்ளது. (யா/டேவிட் வீதிக்கும், யா/பஸ் நிலையத்துக்கிடையில்) கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

0779333210,
0772481140

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

UK - 550/= (C-9382)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

### V2 TRAVELS




வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499 (C-9383)

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L Group Classes
A/L - 2018 / 2019

ஆரம்பம் - 26.08.2017
(சனிக்கிழமை)

அரசியல் : திரு.P.சந்துரு (MEd)
தமிழ் : திரு.N.பரன் M.Phil (Tamil)
இந்துநாகரிகம் : திரு.P.சந்திரன் (MA)
புவியியல் : திரு.PSV.டினேஸ் BA (Hons)

தனிப்பாடங்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

Further Details :-
Jaffna College
Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149 (C-9398)

### கருத்தரங்கு

கல்வி Diploma தெரிவுப் பரீட்சைக்கான
- கல்வி பொதுத் தகைமை
- பொது உளச் சார்பு

விடயங்கள் நடைபெறும் (C-9415)

தொடர்பு : 0766 883 394

### எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) (206)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org